International Peace Academy



# சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் மூலம் காவல் துறையில் சீர்திருத்தம்

## அமுலாக்கத்திற்கான தத்துவமும், வழிகாட்டல்களும்

ஹெஸ்ரா குரொயின் வால்ட் மற்றும் கோ்டன பீக்

செப்ரெம்பர் 2004 ■ நியூயோர்க்

## நன்றி நவிலல்

நியூயோர்க்கில் 2004 மார்ச் 22இலும், 23இலும் சர்வதேச சமாதான கல்வி நிறுவனத்தினாலும், சே.ஃபர்வேர்ள்ட்டினாலும் இணைந்து விருந்தோம்பப்பட்ட **சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்: பந்தோபஸ்தை விருத்தி செய்தல் - அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல்** என்ற கருத்தரங்கில் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்களை இவ்வறிக்கை முன்வைக்கின்றது.

இவ்வறிக்கையில் முன்னைய வரைவொன்றின் மீதான அவர்களது பெறுமதிமிக்க பின்னூட்டலுக்காக மார்க் பஸ்கின், ரெனடா டுவன், கிறிஸ் கேல், அட்ரியன் ஹோர்ன், நீல் ஜார்மன், ஒற்வின் மரினென், கிரஹம் மத்தியாஸ், அன்டி மெக்லீன், ரேச்சல் நீல்ட் மற்றும் லூவன் டீ கூர் ஆகியோருக்கு நன்றி கூற நூலாசிரியர்கள் விரும்புகின்றார்கள். கிளெரா லீ, பிரான்ஸ்சிஸ்கோ மன்சினி மற்றும் நெக்லா சிர்கி ஆகியோரின் மதிப்புரீதியிலான கருத்துக்களுக்காக அவர்களுக்கு நாம் நன்றி கூற விரும்புகின்றோம்.

மகாநாட்டுக்கும், செயலமர்வு அறிக்கையின் தயாரிப்புக்கும் கனடிய வெளிவிவகார அலுவல்கள், சர்வதேச வர்த்தகத் திணைக்களத்திலிருந்து கிடைத்த நிதிசார் ஆதரவையும் நாம் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்கின்றோம். கூட்டங்களை விருந்தோம்பியமைக்காக ஐக்கிய நாடுகளுக்கான கனடாவின் தூதுக் குழுவுக்கும், ஐக்கிய நாடுகளுக்கான லக்ஸம் போர்க்கின் தூதுக்குழுவுக்கும் நாம் நன்றி கூற விரும்புகின்றோம்.

பந்தோபஸ்து-அபிவிருத்தி பிணைப்பு மீதான சர்வதேச சமாதான கல்வி நிறுவனத்தின் திட்டம் ரொக்பெல்லர் மன்றம் மற்றும் அவுஸ்திரேலியா, கனடா (DFAIT மற்றும் CIDA), ஜேர்மனி, லக்ஸ்போர்க், நோர்வே மற்றும் ஐக்கிய ராஜ்யம் (DfID) ஆகிய அரசாங்கங்கள் ஆகியவற்றினால் நிதிப்படுத்தப்படுகின்றன. இந்த சர்வதேச சமாதான கல்வி நிறுவனத் திட்டம் டென்மார்க், சுவீடன் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய அலுவலகங்களிலிருந்தும், போர்ட் மன்றம், மற்றும் வில்லியம், புளோரா ஹெவ்லற் மன்றம் ஆகியவற்றிலிருந்தும் மூலாதார ஆதரவிலிருந்து பாரியளவில் நன்மை அடைகின்றது.

## நூலாசிரியர்கள் பற்றி

லண்டன், சே.ஃபர்வேர்ள்ட், மோதல் தடுப்புத் திட்டத்தில் திட்ட உத்தியோகத்தராக ஹெஸ்டா குரொலின்வால்ட் விளங்குகிறார். அவர் ஆபிரிக்காவில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிறுத்துதல், மோதலைத் தடுத்தல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் பிரச்சனைகள் ஆகியன மீது விரிவாகப் பணியாற்றியுள்ளார்.

நியூயோர்க் சர்வதேச சமாதான கல்வி நிறுவனத்தில் பந்தோபஸ்து துறைச் சீர்திருத்தம் மீது திட்ட இணையாளராக கோர்டன் பீக் விளங்குகிறார். அவர் ஒக்ஸ்வேர்ட், சென் அந்தனிஸ் கல்லூரியில் டி.பில் பட்டத்தைப் பெற்றதுடன், கொஸோவோ மற்றும் பலஸ்தீன பிரதேசங்களின் காவல் துறை தாபனம் பற்றி எழுதினார். அல்பேனியா, கோஸோவோ மற்றும் இந்தோனிஷியா ஆகியவற்றில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் பிரச்சனைகள் மீது சே.ஃபர்வேர்ள்ட் மற்றும் ஐ.நா.அ.தி. ஆகியவற்றினால் ஆலோசனைக்காக நாடப்பட்டார்.

அட்டைப் படம்: சியாரா லியோன் காவல் துறையின் அணி வகுப்பு மரியாதை. இப்படத்தை மீள் பிரசுரிப்பதற்கு அன்புடன் அனுமதியளித்த அட்ரியன் ஹோர்னுக்கு எமது நன்றிகள்.

## நன்றி நவிலல்

நியூயோர்க்கில் 2004 மார்ச் 22இலும், 23இலும் சர்வதேச சமாதான கல்வி நிறுவனத்தினாலும், சே∴பர்வேர்ள்ட்டினாலும் இணைந்து விருந்தோம்பப்பட்ட **சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்: பந்தோபஸ்தை விருத்தி செய்தல் - அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல்** என்ற கருத்தரங்கில் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்களை இவ்வறிக்கை முன்வைக்கின்றது.

இவ்வறிக்கையில் முன்னைய வரைவொன்றின் மீதான அவர்களது பெறுமதிமிக்க பின்னூட்டலுக்காக மார்க் பஸ்கின், ரெனடா டுவன், கிறிஸ் கேல், அட்ரியன் ஹோர்ன், நீல் ஜார்மன், ஒற்வின் மரினென், கிரஹம் மத்தியாஸ், அன்டி மெக்லீன், ரேச்சல் நீல்ட் மற்றும் லூவன் டீ கூர் ஆகியோருக்கு நன்றி கூற நூலாசிரியர்கள் விரும்புகின்றார்கள். கிளெரா லீ, பிரான்ஸ்சிஸ்கோ மன்சினி மற்றும் நெக்லா சிர்கி ஆகியோரின் மதிப்புரீதியிலான கருத்துக்களுக்காக அவர்களுக்கு நாம் நன்றி கூற விரும்புகின்றோம்.

மகாநாட்டுக்கும், மூல செயலமர்வு அறிக்கையின் தயாரிப்புக்கும் கனடிய வெளிவிவகார அலுவல்கள், சர்வதேச வர்த்தகத் திணைக்களத்திலிருந்து கிடைத்த நிதிசார் ஆதரவையும் நாம் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்கின்றோம். கூட்டங்களை விருந்தோம்பியமைக்காக ஐக்கிய நாடுகளுக்கான கனடாவின் தூதுக் குழுவுக்கும், ஐக்கிய நாடுகளுக்கான லக்ஸம் போர்க்கின் தூதுக்குழுவுக்கும் நாம் நன்றி கூற விரும்புகின்றோம்.

இவ்வெளியீட்டின் போது, பந்தோபஸ்து-அபிவிருத்தி பிணைப்பு மீதான சர்வதேச சமாதான கல்வி நிறுவனத்தின் திட்டமானது ரொக்பெல்லர் மன்றம் மற்றும் அவுஸ்திரேலியா, கனடா (DFAIT மற்றும் CIDA), ஜேர்மனி, லக்ஸ்போர்க், நோர்வே மற்றும் ஐக்கிய ராஜ்யம் (DFID) ஆகிய அரசாங்கங்கள் ஆகியவற்றினால் நிதிப்படுத்தப்பட்டதுடன், டென்மார்க், சுவீடன் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய அலுவலகங்களிலிருந்தும், போர்ட் மன்றம், மற்றும் வில்லியம், புளோரா ஹெவ்லற் மன்றம் ஆகியவற்றிலிருந்தும் மூலாதார ஆதரவிலிருந்து பாரியளவில் நன்மை அடைகின்றது.

மக்கள் அமைதியானதும், பயனானதுமான வாழ்க்கையை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் ஆயுத வன்முறையைத் தடுப்பதற்கும், பாதுகாப்பான சனசமூகங்களை உருவாக்குவதற்கும் பணியாற்றுகின்ற சுதந்திரமான தாபனமொன்றே சே∴பர்வேர்ள்ட் ஆகும். மிகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும், நிலைத்திருக்கத்தக்கதாகவும் வருவதற்கு திறன்களுடன் உள்ளூர் பங்காளர்களை அதிகாரமளிப்பதே இதன் குறிக்கோளாகும்.

பலதரப்பட்ட அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச, பிராந்திய, தேசிய மற்றும் உள்ளூர் தாபனங்கள் ஆகியவற்றுடன் செயல்திட்டங்களை சே∴பர்வேர்ள்ட் விருத்தி செய்து, மேற்கொள்கின்றது. ஆராய்ச்சி, பரிந்துரைப்பு மற்றும் பயிற்சி ஆகியவற்றின் இணைப்பொன்றின் ஊடாக அதன் முழு செயற்பாடுகளில் ஒன்றாக உள்ளூர் சனசமூகங்களுக்கு பாதுகாப்பினையும், பந்தோபஸ்தினையும் மேம்படுத்துவதற்கு இயலுமாகவிருப்பதற்கு ஒன்றிணைந்த பந்தோபஸ்து துறை சீர்திருத்தத்தை விருத்தி செய்வதற்கும், நீதியான மூலோபாயங்களை அடைவதற்கும் சே∴பர்வேர்ள்ட் பணியாற்றுகின்றது. ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் தென் ஆசியா ஆகியவற்றில் செயல்திட்டங்களை தாபனம் கொண்டுள்ளது. சே∴பர்வேர்ள்ட் மற்றும் அதன் நடவடிக்கைகள் பற்றி மேலும் தகவலை அறிவதற்கு www.saferworld.org.uk

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் ஊடாக ஐ.இ. அரசாங்கத்தின் உலகளாவிய மோதல் தடுப்புத் தொகுதியினால் இந்த மீள்-அச்சு நிதிப்படுத்தப்படுகின்றது.

## நூலாசிரியர்கள் பற்றி

லண்டன், சே∴பர்வேர்ள்ட், மோதல் தடுப்புத் திட்டத்தில் திட்ட உத்தியோகத்தராக ஹெஸ்டா குரொலின்வால்ட் விளங்குகிறார். அவர் ஆபிரிக்காவில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிறுத்துதல், மோதலைத் தடுத்தல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் பிரச்சனைகள் ஆகியன மீது விரிவாகப் பணியாற்றியுள்ளார்.

நியூயோர்க் சர்வதேச சமாதான கல்வி நிறுவனத்தில் பந்தோபஸ்து துறைச் சீர்திருத்தம் மீது திட்ட இணையாளராக கோர்டன் பீக் விளங்குகிறார். அவர் ஒக்ஸ்வேர்ட், சென் அந்தனிஸ் கல்லூரியில் டி.பில் பட்டத்தைப் பெற்றதுடன், கொஸோவோ மற்றும் பலஸ்தீன பிரதேசங்களின் காவல் துறை தாபனம் பற்றி எழுதினார். அல்பேனியா, கோஸோவோ மற்றும் இந்தோனிஷியா ஆகியவற்றில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் பிரச்சனைகள் மீது சே∴பர்வேர்ள்ட் மற்றும் ஐ.நா.அ.தி. ஆகியவற்றினால் ஆலோசனைக்காக நாடப்பட்டார்.

# உள்ளடக்கம்


நிறைவேற்றுச் சாராம்சம்........ i

I. அறிமுகம்........ 1

II. காவல் துறை சீர்திருத்தத்திற்கான மாதிரியொன்றாக சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலை நிறுத்துதல்.. 2

III. சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல்: சட்டத்தையும், ஒழுங்கையும் விட மேலானது........ 3

IV. காவல் துறைச் சீர்திருத்தத்தின் கஷ்டம் பற்றி கற்கப்பட்ட பாடங்கள்........ 5

V. களத்திலிருந்து விவரணம்: நடைமுறையில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல்........ 6

VI. சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்: ஓர் அமுல்படுத்தல் வரைச்சட்டம்........ 10

அ. முக்கியமான தத்துவங்கள்........ 10

ஆ. முக்கியமான வெற்றியிலான காரணிகள்........ 11

இ. அமுலாக்கல் வரைத்திட்டம்........ 12

VII. முடிவுரை........ 20

செயலமர்வு நிகழ்ச்சி நிரல்........ 21

பங்கெடுப்பாளர்களின் பட்டியல்........ 23

## நிறைவேற்றுச் சாராம்சம்

மோதல் முகாமைத்துவத்தின் அடிப்படை மூலத்துவமொன்றாக காவல் துறை சீர்திருத்தம் அதிகரித்தளவில் அங்கீகரிக்கப் படுகின்றது. சனசமூகத்தினால் ஆதரவளிக்கப்படுவதும், பாதுகாப்பின்மையைக் குறைப்பதில் தகுதியைக் கொண்டதுமான காவல் துறைச் சேவையொன்று நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் முன்னேற்றத்தை இயலச் செய்வதில் மிக முக்கியமான தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும். பந்தோபஸ்து துறை சீர்திருத்தம், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சி ஆகிய துறைகளில் வேறு திட்ட நிகழ்ச்சிப்படுத்தலை காவல் துறை சீர்திருத்தம் நிறைவுபடுத்தி, உற்சாகமூட்ட முடியும்.

காவல் துறையைச் சீர்திருத்துவதற்கும், அவற்றின் சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற்குமான முயற்சிகள் பயமுறுத்துகின்ற அரசியல்ரீதியானதும், நிதிசார்ரீதியானதும், தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைவுரீதியானதும், மற்றும் வரலாற்றுரீதியானதுமான தடைகளுக்கு முகம்கொடுக்கின்றன. இதன் மிகவும் சிக்கல்தன்மையானது முகாமைத்துவம், தலைமைத்துவம், அரசியல் மனவுறுதி, போக்குகள், தாபிக்கப்பட்ட நடத்தைகள் மற்றும் மறுதலையான பொதுசன மனவுணர்வுகள் ஆகிய பிரச்சனைகள் மீது பயமுறுத்துவதாகவும், பரிதாபகரமானதாகவும் விளங்க முடியும்.

எனினும், இது தட்டிக் கழிக்கப்பட முடியாது என்பதாகவே அதன் மையநிலை கருத்தினைக் கொண்டுள்ளது. எப்பொழுதுமே விரிவடைகின்ற வீச்செல்லையிலான செயற்பாட்டாளர்களினால் பொறுப்பேற்கப்படுகின்ற காவல் துறை சீர்திருத்தத்துடன், காவல் துறை சீர்திருத்தம் எதை பராதீனம் செய்யாதிருக்கின்றது என்பதையும், அது எவ்வாறு பொறுப்பேற்கப்பட வேண்டும் என்பதையும் இட்டு தெளிவான புரிந்துணர்வொன்று அவசியமாகும்.

காவல் துறையைச் சீர்படுத்துவதையும், அவர்கள் பொதுசன பிரதிமையைப் புனரமைப்பதையும் சனசமூக-அடிப்படையிலான அணுகுமுறையொன்று வலியுறுத்துகின்றது. குற்றம் மீதான ஒடுங்கிய நோக்கொன்றுக்கு அப்பால் செல்லும் போது, சனசமூக கரிசனைகளைக் கவனத்திற்கெடுக்குமுகமாக தோழமையுடன் காவல் துறையும், சனசமூகங்களும் ஒன்றாகப் பணியாற்றுவதை தத்துவம் முன்மொழிகின்றது. வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் போது, இரண்டுமே பந்தோபஸ்தையும், பலப்படுத்தப்பட்ட அபிவிருத்தியையும் விருத்தி செய்ய முடியும்.

நன்கு புாநிது கொள்ளப்பட்ட தத்துவத்தினதும், தெளிவான எண்ணத்திலான திட்டத்தினதும், அதைச் சாதிப்பதற்கு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதும், நிருவகிக்கப்படுவதுமான நடைமுறையினதும் மீது வெற்றி அவ்வப்போது நேரிடுகின்றது. வெற்றிகரமான சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்தலை ஈடுபடுத்துவதற்கு சில காரணிகளும் முக்கியமானவையாகும். நாட்டினுள், அரசாங்கம், காவல் துறை மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகிய முக்கிய செயற்பாட்டாளர்களிடமிருந்து உகந்த சம்பந்தத்தையும், அரசியல் ஆதரவையும் போன்று ஒழுங்கின் குறைந்தபட்ச மட்டத்திலான ஒழுங்கு அவசியமானதாகும். சர்வதேச செயற்பாட்டாளர்கள் மத்தியில் குறிக்கோள்களின் பங்கிடப்பட்ட புரிந்துணர்வொன்றும், அவர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பும் விசேடமாக அனுகூலமானதாகும்.

முன்கூட்டிய ஈடுபடுத்தல் பகுப்பாய்வும், மதிப்பீடும்ஞ வடிவமைப்பும், திட்டமிடலும்ஞ அமுலாக்கத்தை நிருவகித்தல்ஞ மதிப்பாய்வும், பின்னடைவும் ஆகிய நான்கு கட்டங்களை அமுலாக்கல் வரைத்திட்டமொன்று உள்ளடக்க வேண்டும். இத்தகையதொரு சிக்கலான பொறுப்பு முயற்சியில், மாற்றத்தின் நிருவகிக்கப்பட்ட நடைமுறையொன்று முக்கியமானதாகும். வெற்றிகரமான அமுலாக்கமொன்று விரிவானதும், விளக்கமானதுமான மூலோபாயத் திட்டமிடலைப் பராதீனம் செய்கின்றது. குறிக்கோள்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும், சம்பந்தத்திற்கு தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும், அத்துடன் அவற்றைப் புத்திசாதுரியமாகச் சாதிப்பதற்கு வீதி வரைபடமொன்று கீறப்பட வேண்டும். திட்டங்கள் வளைந்து கொடுக்கக்கூடியவையாக விளங்க வேண்டும். மாற்றமடையும் சூழ்நிலைகளுக்கு நடைமுறையின் நடந்து கொண்டிருக்கும் கண்காணித்தலும், மதிப்பாய்வும் திட்டங்கள் பதிலிறுக்கும் என்பதை உறுதிப்படுத்தும். அதிகளவை, அதி விரைவில் செய்யாமல் இருப்பதற்கு கவனம் எடுக்கப்பட வேண்டும். ஆனால், காவல் துறையினதும், சனசமூகங்களினதும் ஒழுங்கமைத்தல் ஆற்றலளவை படிப்படியாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

காவல் துறையும், அரசாங்கமும், சிவில் சமூகமும் கருத்தாழ மிக்க வகையில் சம்பந்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக சாத்தியமானளவு உத்தேசத்திலான ஈடுபடுத்தலின் வடிவமைப்பு, திட்டமிடல், அமுலாக்கம், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு ஆகியன பரந்ததாகவும், ஆலோசனைக்குரிய தாகவும் விளங்க வேண்டும். முன்னேற்றத்தில் அடிமட்டப் பணிகளை திட்டம் தாபிக்க வேண்டும். நன்கொடையாளர் நிதிப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு உதவியாகவுள்ள இது, என்ன சாதிக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதுடன், சர்வதேச சம்பந்தம் இல்லாமல் சீர்திருத்த நடைமுறையொன்று எப்பொழுது தொடர முடியும் என்பதைத் தீர்மானிப்பதற்கான தொரு அளவீடாகவும் விளங்குகின்றது.

# I. அறிமுகம்

பந்தோபஸ்துத் துறையின் மிகவும் கண்ணுக்குத் தெரியத்தக்க நிறுவனமாகக் காவல் துறை விளங்குவதுடன், நிரந்தரமான மனிதப் பந்தோபஸ்துக்கு அதனைச் சீர்திருத்துவது முக்கியமானதாகும். சட்டத்தை வினைப்படுத்தாமலும், காவல் துறையினால் வழங்கப்படக்கூடிய உழைப்பு, பாதுகாப்பு, பந்தோபஸ்து மற்றும் ஒழுங்கு ஆகியனவற்றின் உணர்வின்றியும், பரந்த அரசியல், சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியனவற்றுக்கான ஆற்றலளவு தத்ரூபமான முறையில் சரிவடைகின்றது. சீவியத்தொழிலானதும், பொறுப்புத்தன்மை யிலானதுமான பொலிஸ் சேவையொன்றை விருத்தி செய்தலும், உள்ளூர் சனசமூகங்களின் தேவைகளுக்கு பதிலிறுப்பிலான ஒழுங்கை நிலைநிறுத்துகின்ற புதியதொரு முறையை அனுஷ்டிப்பதும் சிறந்த மோதல் முகாமைத்துவத்திற்கு முக்கியமானதாக அதிகரித்தளவில் அங்கீகரிக்கப்படுகின்றது. அடையாளங்களாக காவல் துறை சமஅளவில் முக்கியமானதாகும். அதன் குணாதிசயத்தை மாற்றியுள்ளதாகத் தெரிகின்றதும், கடந்த காலத்தின் அடக்குமுறையிலான நடைமுறையிலிருந்து வழுறிவை ஏற்படுத்துவதும், அது வரலாற்றுரீதியில் அகற்றப்பட்ட சனசமூகத்துடன் தோழமையுடன் பணியாற்றுகின்றதுமான காவல் துறையொன்று அபரிதமான அடையாள எதிரொலியைக் கொண்டுள்ளது.

மோதல் முகாமைத்துவத்தின் கருவியொன்றாக காவல் துறை சீர்திருத்தத்துடன் இணைந்துள்ள முக்கியத்துவம் அதை மேற்கொள்வதற்கு முயற்சிக்கின்ற தாபனங்களின் அதிகரிப்பினால் சான்றுபகரப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே ஐ.நா. அமைதிப்படை, பாரியதும், பன்னிலையிலானதுமான எண்ணிக்கையிலான சர்வதேசத் தாபனங்கள், அபிவிருத்தி வங்கிகள், அரச சார்பற்ற தாபனங்கள், அதிகரித்து வருகின்ற தனியார் நிறுவனங்கள் ஆகியன சம்பந்தப்பட்டுள்ளன. உத்தேசமான சீர்திருத்தங்களில் தலையிடவுள்ளவர்களின் சூழ்நிலைகளும் விரிவடைந்துள்ளன. ஆரம்பத்தில் மோதலின் பின்னரேயே காவல் துறை சீர்திருத்தம் இடம்பெற்றது. ஆனால், அது பரந்த மோதல் தடுப்பு மூலோபாயமொன்றின் அதிகரித்தளவிலான அங்கமாகவே விளங்குகின்றது.

காவல் துறைச் சீர்திருத்தத்திற்கான சர்வதேச ஆதரவு தென் ஆபிரிக்கா, மலாவி மற்றும் வட அயர்லாந்து போன்ற நாடுகளினுள் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கான உதவியிலிருந்து, கொஸோவோ மற்றும் கிழக்குத் திமோர் போன்ற மோதலுக்குப் பிந்திய சம்பந்தத்தில் அதிகளவில் சர்வதேசரீதியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் வரையிலானவற்றுக்கு மாறுபட்டுள்ளது. ஐ.நா. சமாதானப் படையின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அண்ணளவாக நான்கில் ஒரு களப் பணியாளர்கள் ஈராக், சூடான், மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளின் நீண்ட கால பந்தோபஸ்தைக் கவனத்தில் எடுப்பதற்காக காவல் துறையைச் சீவியத்தொழில்ரீதிப்படுத்தலினதும், நட்புறவற்ற சனசமூகங்களுடன் அவர்களது உறவை மேம்படுத்தலினதும் அம்சங்களை உள்ளடக்கும் காவல் துறை சீர்திருத்தத்தினதும், நடைமுறையிலான மூலோபாயங்களினதும் சில அம்சங்களில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.[1]

அமுல்படுத்துபவர்கள் யார், அத்துடன் மோதல் சுழற்சியின் எக்கட்டத்தில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என்பது முக்கியமில்லாவிட்டாலும், ஒன்றில் காவல் துறையில், அல்லது அவர்களை நோக்கிய பொது மக்களின் மனோநிலையில் எடுத்துக்காட்டக்கூடிய மாற்றமொன்றை செயற்படுத்துவது கஷ்டமென நிரூபிக்கப்பட்டுள்ளது. சமூகங்களில், பாதுகாப்புக்கும், சௌகரியத்திற்கும் மூலமொன்றை விட அச்சத்திற்கான அதிகளவிலான ஒரு காரணியாக சீருடையிலான காவல் துறை உத்தியோகத்தர்கள் விளங்குவதனால் சட்டபூர்வத்தன்மையைக் கட்டியெழுப்புவதில் அவர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். நம்பிக்கையீனத்தின் மரபுரிமைப்பண்பினை வெற்றிகொள்வது கஷ்டமானதாகும். நம்பிக்கையினதும், பொறுப்புறுதியினதும் புதிய கலாசாரமொன்றை உருவாக்குவது கஷ்டமானதாகும்.

மேலும், தெளிவான மூலோபாயங்களுடனும், நோக்கங்களுடனும் உச்சரிக்கப்படுகின்ற கருத்துருவிலான வரைத்திட்டத்தை சர்வதேச சீர்திருத்த முயற்சிகள் அனேகமாகக் கொண்டிருப்பதில்லை. அடிப்படை அறிவுரைகள் மீதான தெளிவின்மையானது ஏற்கனவே மாற்றத்தின் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க, அல்லது மாற்றத்தினை எதிர்க்க முயலுகின்ற இலக்கிலான காவல் துறைச் சக்திக்கான சீர்திருத்தத்தின் நற்குணங்களைத் திருப்தியளிக்கும் வகையில் விளக்குவதற்கு சர்வதேச செயற்பாட்டாளர்கள் கஷ்டப்படுவார்கள். காவல் துறை பற்றிய புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் தப்பெண்ணத்திலான கருத்தினைக் கொண்டுள்ள மௌனப்போக்கிலான பொது மக்களுக்கு சீர்திருத்தத்தினை விற்பது கஷ்டமானதாகும். தெளிவான செயற்பாட்டிலான திட்டமொன்று இல்லாமையினால், சீர்திருத்த முயற்சியின் குழறுபடியிலான எண்ணக்கருத்துத்தன்மை மேலும் பெரிதும் அடிக்கடி கலந்திருக்கும் போது, சிறிதளவை விட்டு வைக்கின்ற வழிமுறைத் தொகுப்பிலான குழப்பத்தையே விளைவாகக் கொண்டுள்ளது.

காவல் துறைச் சீர்திருத்தத்திற்கு இத்தகையதொரு எண்ணக்கரு வரைத்திட்டத்தை வழங்குவதை நாடிநிற்கின்ற ஆவணமொன்றையிட்டு கருத்துப் பரிமாறுவதற்கும், கட்டியெழுப்புவதற்கும் 2004 மார்ச்சில் நியூயோர்க்கில் இரு நாள் செயலமர்வொன்றை லண்டனைத் தளமாகக் கொண்ட அ.சா.தாபனமான சே.்.பர்வேர்ள்ட்டுடனான தோழமையுடன் சர்வதேச சமாதான கல்வி நிறுவனம் கூட்டியிருந்தது. காவல் துறை சீர்திருத்தத்தின் அடிப்படை தத்துவவியலிலான கருத்துக்களை விளக்குவதற்கு சே.்.பர்வேர்ள்ட்டினால் எழுதப்பட்ட ஆவணமொன்றே சனசமூக அடிப்படையிலான

[1] ஐக்கிய நாடுகள் சமாதான செயற்பாடுகள் மீதான குழாமின் அறிக்கை (பிரஹமி அறிக்கை), 2000, பந்தி 181

ஒழுங்கை நிலைநிறுத்துதலின் தத்துவவியலும், அடிப்படைக் கோட்பாடுகளும் ஆகும்.[2] அண்மையில் வெளியிடப்பட்ட இது அல்பேனியாவிலும், கென்யாவிலும் காவல் துறைச் சீர்திருத்த கருத்திட்டங்களுக்கு வழிகாட்டியொன்றாக ஏற்கனவே விளங்கியுள்ளது. இது ஐ.நா. முறைமை நன்கொடையாளர் அரசாங்கங்களினுள்ளும், சுயேச்சையான நிபுணர்களினுள்ளும் இருந்து நிபுணத்துவச் செயற்பாட்டாளர்களை ஒன்றாகக் கொண்டு வரும். இச் செயலமர்வு சனசமூக அடிப்படையிலான ஒழுங்கை நிலைநிறுத்துதலை தவிர்க்க முடியாததாக்குகின்றது. அத்துடன், பரந்த மோதல் முகாமைத்துவ மூலோபாய மொன்றினுள் அது எவ்வாறு பொருந்துகின்றது என்பதைத் தெளிவான புரிந்துணர்வொன்றைச் சாதிப்பதனை செயலமர்வு நோக்காகக் கொண்டிருக்கின்றது.

மோதல் முகாமைத்துவத்திற்கான பொறிமுறையொன்றாக சனசமூக-அடிப்படையிலான ஒழுங்கை நிலைநிறுத்துதலின் கருத்துருவை முதல் தினத்தின் கருத்துப் பரிமாறல்கள் ஆராய்ந்ததுடன், அதைச் செயல்முறைப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமிடுதல் அணுகுமுறைகளை மதிப்பாய்ந்தது. ஒரு சனசமூக அடிப்படையிலான அணுகுமுறையொன்று பொலிஸ் சீர்திருத்தத்தில் பொருந்துகின்றது என்றும், பரந்த மோதல் முகாமைத்துவ மூலோபாயங்களை எவ்வாறு பூரணப்படுத்துகின்றது என்றும் அது கரிசனைக்கு எடுத்தது. அமுலாக்கத்திற்கு பணி சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு பயனுள்ளதாக விளங்கக்கூடிய வழிகாட்டியொன்றைத் திட்டமிடுவதை இரண்டாவது தினத்தின் வாதப்பிரதிவாதங்கள் கோரிநின்றன. இரு நாள் செயலமர்விலிருந்து கருத்துப் பரிமாறல்களை இவ்வறிக்கை




*டேவிட் எம். மலோன், தலைவர், சர்வதேச சமாதான கல்வி நிறுவனம் மற்றும் அதிமேகு அலன் ரொக், ஐக்கிய நாடுகளுக்கான கனடாவின் நிரந்தரக் தூதுக் குழு*

சாராம்சப்படுத்துவதுடன், செயலமர்வு பங்கெடுப்பாளர்களின் அறிவினதும், அனுபவத்தினதும் மீதான அடிப்படையிலான அமுலாக்குனர்களுக்கு பயனுள்ள வழிகாட்டியொன்றை முன்மொழிகின்றது.

## II. காவல் துறை சீர்திருத்தத்திற்கான மாதிரியொன்றாக சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலை நிறுத்துதல்

குற்றம், ஒழுங்கீனம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக புதிய வழிகளில் ஒன்றாகப் பணியாற்றுவதற்கு காவல் துறையையும், சனசமூகத்தையும் அனுமதிக்கின்ற தத்துவமாகவும் (எண்ணிப்பார்க்கும் வழியொன்றாக), தாபனரீதியான மூலோபாயமாகவும் (தத்துவத்தை மேற்கொள்கின்ற வழியொன்றாக) விளங்குவதே சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதாகும். காவல் துறையின் முறைகளையும், நடைமுறைகளையும் மாற்றுதல், மற்றும் காவல் துறைக்கும், பொது மக்களுக்கும் இடையில் உறவொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய இரு பூரணமான மூலத்துவங்கள் மீது அது தங்கியுள்ளது.

**சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் அடிப்படைத் தத்துவங்கள்**

1. ஒப்பந்தம் அன்றி இணக்கத்தின் மூலம் ஒழுங்கை நிலைநிறுத்துதல்
2. சனசமூகத்தில் இருந்து தூரவிலகாமல், சனசமூகத்தின் அங்கமாகத் காவல் துறை
3. சனசமூகங்களின் தேவைகள் எவை எனக் கண்டறிவதற்கு காவல் துறையும், சனசமூகமும் ஒன்றாகப் பணியாற்றுதல்
4. தோழமையுடன் காவல் துறையும், பொது மக்களும், வேறு முகவராண்மைகளும் ஒன்றாகப் பணியாற்றுதல்
5. சனசமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒழுங்கை நிலைநாட்டுதலின் உரிமையை உருவாக்குதல்

ஒழுங்கை நிலைநாட்டுதலில் உள்ளீடொன்றுக்கு பொது மக்கள் தகுதியைக் கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையின் மீதே தத்துவவியல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. சனசமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டறியுமுகமாக, தனிப்பட்ட குற்றங்களின், அல்லது சம்பவங்களின் மீதான ஒடுங்கிய நோக்கொன்றுக்கு அப்பால் காவல் துறையும், பொது மக்களும்

[2] சே.்.பர்வேர்ள்ட் மற்றும் சிறு ஆயுதங்களுக்கும், இலகு ஆயுதங்களுக்குமான கட்டுப்பாட்டுக்கான தென் கிழக்கு ஐரோப்பிய அப்புறப்படுத்தல் நிலையம் (SEESAC), சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் தத்துவமும், அடிப்படைக் கோட்பாடுகளும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினாலும், தென் கிழக்கு ஐரோப்பாவுக்கான ஸ்திரப்படுத்தல் உடன்படிக்கையினாலும் ஆதரவளிக்கப்பட்டது, 2003. ஹெஸ்டா குரொயின்வல்ட், டேவிட் கென்டிரிக், கிரஹம் மதியாஸ் மற்றும் கோர்டன் பீக் ஆகியோரே அறிக்கையின் ஆசிரியர்களாவர். மோதல் தடுப்பு, மீட்பித்தல் பணியகம்/ஐ.நா.அ.தி. மற்றும் ஐ.நா.அ.தி. அல்பேனிய நாட்டு அலுவலகம் ஆகியவற்றினால் வெளியீடு நிருவகிக்கப்பட்டது. <http://www.saferworld.org.uk/policing/cbpbalkans.htm>இல் அறிக்கை கிட்டுகின்றது.

நகர வேண்டும் என்பதுடன், பதிலாக சனசமூக கரிசனைகளை கவனத்தில் எடுப்பதற்கான புதுமையான வழிகளையும் கருத்திற்கெடுக்க வேண்டும்.

காவல் துறையினர் வெறுமனே குற்றத்தை எதிர்ப்பவர்களுக்கு மேற்பட்டவர்கள், அவர்கள் வேறு வழிகளில் அரசாங்க சேவையாளர்களாக விளங்க முடியும் என்ற அங்கீகாரமே சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் மையப் பகுதியில் உள்ளது. பொது மக்களுடன் தோழமையுடன் பணியாற்றுகின்ற சீவியத்தொழில்ரீதியான, பிரதிநிதித்துவ ரீதியான, பதிலிறுப்பிலான, பொறுப்புக் காட்டக்கூடிய நிறுவனமொன்றை உருவாக்குவதே முடிவான நோக்காகும். இந்த கூசமாதான உத்தியோகத்தர்கள்' சக்தி அல்ல என்பதை விட சேவையொன்றே என்பதுடன் குற்றவாளிகள் மட்டுமே நியாயமாக அச்சமடைவதற்கு அவசியமான நிறுவனமொன்றாகும்.

தனிப்பட்ட, நிறுவனரீதியான மற்றும் கூட்டுக்குழு ஆகிய மூன்று மட்டங்களில் நடவடிக்கை எடுப்பதை இக் குறிக்கோள்களை சாதிப்பது வேண்டுகின்றது.[3] சேவையினதும், தகுதியினதும் பெறுமதிகள் தனிப்பட்ட உத்தியோகத்தரின் மட்டத்தில் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ள போதிலும், இப்பெறுமதிகளைப் பதியவைப்பதிலும், நிலைத்திருக்க வைப்பதிலும் தகுதியைக் கொண்ட பொருத்தமானதொரு முகாமைத்துவக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். எனினும், காவல் துறைக்கு மட்டும் சீர்திருத்தமானது போதுமானதல்லளூ காவல் துறையின் அடிப்படைக் குறிக்கோள்களைச் சாதிப்பதற்கு சனசமூக ஆதரவும், உதவியும் அவசியமானதாகும். அடிக்கடியாக சிறந்த காரணங்களுக்காக காவல் துறைக்கு பரிகாசத்தை ஏற்படுத்துவதாகவும், நம்பிக்கையீனமாகவும் விளங்குகின்ற பொது மக்களை மீள்முனைப்படுத்துவதற்கான மூலோபாயங்களை சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் சூழ்ந்திருக்கின்றது. இது காவல் துறைக்கும், சனசமூகங்களுக்கும் இடையில் தோழமைகளைக் கட்டியெழுப்புதலில் உயர்ந்த நோக்குடைய சீர்திருத்த வாதிகளை எதிர்நோக்குகின்ற பாரியதொரு சவாலாகும். ஆனால், இது வரை இச் சவாலுக்கு சிறிதளவு அங்கீகாரத்தையே சர்வதேச சீர்திருத்த முயற்சிகள் வழங்கியுள்ளன. சீர்திருத்த முன்னுரிமையொன்றாக உள்ளூர் சனசமூகங்களுடன் ஈடுபடுதலையிட்டு ஐ.நா. செயலணி களுக்கான கடப்பாடுகளில் ஒன்றுமே குறிப்பிடவுமில்லை.

மாற்றத்தைச் செயற்படுத்துவதில் நம்பிக்கையையும், அர்ப்பணிப்பினையும் காவல் துறையினரும், பொது மக்களும் கொண்டிருப்பதை சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் பற்றிய தத்துவம் கோரி நிற்கின்றது. இது பல்வாறான மட்டங்களில் எடுக்கப்பட வேண்டிய சமகால நடவடிக்கையைக் கோருகின்ற சிக்கலான நடைமுறை யொன்றாகும். இதன் அர்த்தம் என்னவெனில், விரிவான மூலோபாயத் திட்டமிடலானது, காவல் துறை தாபனத்தினுள்ளும், பொது மக்களின் மத்தியிலும் தத்துவத்தை நடைமுறைக்கு மாற்றுவதற்கு அவசியமானதாகும். எனினும், சர்வதேசரீதியில் தூண்டுதலிலான காவல் துறைச் சீர்திருத்தத் திட்டங்களில் விரிவானதொரு திட்டம் இல்லாதிருப்பது அடிக்கடி நிரூபிக்கப்பட்டுள்ளது. காவல் துறைச் சீர்திருத்தத்திற்கான வாக்குவன்மையிலான அர்ப்பணிப்புக்கு அப்பால், கோரப்பட்டுள்ள மாற்றங்களைச் சாதிப்பதற்கு சீர்திருத்த நடைமுறையொன்றை எவ்வாறு செயற்படுத்துவது என்பதற்கு சிறிதளவு உணர்வே உள்ளது.

## III. சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல்: சட்டத்தையும், ஒழுங்கையும் விட மேலானது

தனிமைப்படுத்தலில் மேற்கொள்ளப்படாத செயற்பாடொன்றே ஒழுங்கை நிலைநாட்டுதலாகும். வாகனத் தரிப்பிடச் சீட்டுக்களை வழங்குவதிலிருந்து, குற்றங்களைத் தடுப்பது வரையிலான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தனிப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அழைப்பினை விடுக்கும் ஒழுங்கை நிலைநாட்டுதலின் சகல தொடர்புபடுத்த தகாத அம்சங்களும் வேறு நிறுவனங்களினதும், நடைமுறைகளினதும் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பதுடன், அவற்றைச் சம்பந்தப்படுத்துமுகின்றன. பலதரப்பட்ட பந்தோபஸ்து, சமூக, மற்றும் அபிவிருத்தி நோக்கங்களையும், நிகழ்ச்சி நிரல்களையும் முன்னேற்றுவதற்கு எவ்வாறு ஒரு சனசமூக அடிப்படையிலான காவல் துறை சீர்திருத்த திட்டம் பொருந்துகின்றது என்பதையும், அவை எவ்வாறு குறிப்பிடத்தக்களவில் பங்களிக்க முடியும் என்பதையும் இட்டு செயலமர்வு கருத்துப் பரிமாறியது.

### சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதலும், பந்தோபஸ்துத் துறை சீர்திருத்தமும்

பந்தோபஸ்து துறை சீர்திருத்தங்களின் பகுதிகள் எவ்வாறு தொடர்பினைக் கொண்டுள்ளன, ஒன்றுடன் மற்றொன்று தொடர்பினைக் கொண்டுள்ளன என்பதையிட்டு அவசியமான விதத்தில் பார்க்காமல், அவற்றை வெளியார் செயற்பாட்டாளர்கள் பொறுக்கி, தெரிவு செய்கிறார்கள். கொள்கை மட்டமொன்றில், பந்தோபஸ்து துறையின் முக்கியமானதொரு அம்சமாக காவல் துறை கருதப்படுகின்ற போதிலும், அமுலாக்கல் மட்டத்தில் இரண்டுக்கும் இடையிலான இந்த ஒன்றுடன் ஒன்று செயற்படுதல் அபூர்வமானதாகும். பெருமளவு நன்கொடையாளர்களுக்கு பந்தோபஸ்து துறை சீர்திருத்தமானது ஆரம்பநிலையிலான இராணுவக் கரிசனையொன்றாகும். அதாவது ஒழுங்கை நிலைப்படுத்தலை முன்னுரிமைப்படுத்தாதிருக்கின்றது. சில வேளைகளில் வேறுபட்ட நிறுவனரீதியிலான "பதனக்குறியாகும்", இது ஒழுங்கை நிலைநாட்டுவதில் உண்மையான ஒருங்கிணைப்பு க்கான நிறுவனரீதியிலான தடையொன்றை முன்வைக்கின்றது.

3 எல்.லிண்ட் ஹோல்ற், பி.டி.மெஸ்கியூற்றா நெற்றோ, டி. ரைட்டஸ், மற்றும் இ.அலேமிக்கா, மாற்று நிலையிலான நாடுகளில் மனித உரிமைகளும், காவல் துறையும், (லெயிடன்: பிரில் கல்வி நிறுவன வெளியீடு, 2003), பக்கம் 22

பந்தோபஸ்து துறையை ஈடுசெய்கின்ற பலதரப்பட்ட நிறுவனங்களை நோக்கிய சீர்திருத்த நடைமுறைகளுக்கு இடையில் பாரிய ஒன்றுடன் ஒன்று செயற்படுதல் நன்மைபயப்பதாக விளங்கும்.

**சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல், சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி, மனித உரிமைகள்**

சக்திமிக்கதாக விளங்குவதற்கு, காவல் துறைச் சீர்திருத்தமானது ஏனைய குற்றவியல் நீதித்துறை நிறுவனங்களுடன் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். நீதி முறைக்கான பிரவேசப்புள்ளியும், பொது மக்களுடனான மிக நெருங்கிய தொடர்பின் பகுதியிலும், நியாயமானதும், தகுதியிலானதும், பாகுபாடு காட்டாததும், மரியாதைக்குரியதுமான காவல் துறை சட்டத்தின் விதியை நிலைநிறுத்துவதில் பூரணத்துவமானதாகும். நீதிமன்றங்களினதும், செம்மைப்படுத்துகின்ற சேவையுடனும் வழியே, நீதிமுறையொன்று செயற்றிறனாக நிருவகிக்கப்படு வதற்கு அவசியப்படும் நிறுவனங்களின் கூழமுத்தொகுதி'யின் அத்தியாவசியமான அங்கமொன்றாக காவல் துறையினர் விளங்குகின்றனர்.[4] நிறுவனங்களின் இந்த முத்தொகுதியின் ஒன்றுக்கான உறுதியான தாக்கங்கள் வேறு நிறுவனங்கள் மீதான ஒத்த ஒருமுகப்படுத்தல் இன்றி செல்லாததாக்கும்.

**சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல், அபிவிருத்தி, மற்றும் வறுமைக் குறைப்பு**

பரந்த வறுமைக் குறைப்பு மூலோபாயத்திற்கு சனசமூக அடிப்படையிலான காவல் துறைச் சீர்திருத்தம் பங்களிக்க முடியும். பந்தோபஸ்து, அபிவிருத்தி மற்றும் வறுமைக்குறைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புகளைப் பெருமளவு நன்கொடை முகவராண்மைகளும், அரசாங்கங்களும் அங்கீகரித்துள்ளன. ஏதாவது சனசமூகத்தின் உயர்ந்த மட்டங்களிலான குற்றங்கள் அபிவிருத்தியை மூச்சு திணற வைக்கின்றன. வியாபாரங்கள் குற்றங்களினால் பாதிக்கப்படு கின்றன. வர்த்தகச் செயற்பாடுகள் (முறைசாராத் துறையினரின் உட்பட) தடுக்கப்படுகின்றன. வெளியார் மூலதனங்கள் விட்டுவிலகுகின்றன.

குற்றத்தினதும், வன்முறையினதும் தாக்கங்களிலிருந்து ஏழைகளும், ஓரங்கட்டப்பட்டவர்களும் ஈடில்லாத வகையில் பாதிப்படைகின்றனர். மோசடியிலான, அல்லது தொழிற்படாத பந்தோபஸ்து நிறுவனங்களிலிருந்து போதியளவு பாதுகாப்பினை அவர்கள் பெறுவதில்லை. அரசியல் அல்லது சமூகக் கட்டமைப்புக்கள் என்று வரும் போது ஏழைகள் அடிக்கடி ஓரங்கட்டப்படுகின்றார்கள் என்பதுடன், தமது நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கின்ற கொள்கைகளினதும், திட்டங்களினதும் மீது மிகவும் சிறிதளவு செல்வாக்கினையே அவர்கள் அனேகமாகக் கொண்டிருக்கிறார்கள்.

அதன் தோழமையிலான அணுகுமுறை ஊடாக சனசமூக அடிப்படையில் ஒழுங்கினை நிலைநாட்டுகின்ற போது அது



*திரு.கிரஹம் மத்தியாஸ், சிரேஷ்ட ஒழுங்கை நிலைநிறுத்துதல் ஆலோசகர், சே.ஃ.பர்வேர்ள்ட்*

குறிப்பிட்ட சனசமூகமொன்றில் உள்ள சகல குழுக்களின் பாதுகாப்பும், பந்தோபஸ்து தேவைகளும் கவனத்தில் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. குற்றங்களைச் செயற்றிறனாகக் கவனத்திற்கெடுப்பது பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும் மேம்படுத்துகின்றதுடன், இதனுடன் அபிவிருத்திக்கான நிலைமைகள் இடம்பெறுவதையும் வலிமைப்படுத்துகின்றது.

**சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதலும் சிறிய ஆயுதங்கள் பல்கிப்பெருகுவதைத் தடுத்தலும்**

சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிறுத்துதலின் குறிக்கோளின் பொருட்டு சனசமூகப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான முயற்சியொன்றில், சிறிய ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் கிடைத்தலையும், விநியோகத்தையும் கட்டுப்படுத்துதல் முக்கியமானதாகும். எனினும், பொது மக்களின் பாதுகாப்பிலும், பந்தோபஸ்திலும் மேம்படுத்த லொன்றையிட்டு பிரஜைகள் மனத்தோற்றப்பாட்டைக் கொண்டிருந்தாலும், காவல் துறையிலும், ஏனைய பந்தோபஸ்து முகவராண்மைகளிலும் ஒரு குறிப்பிட்ட மட்டத்திலான நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தாலும் மட்டுமே சுடுகலன்களைக் கையளிப்பதற்கு பிரஜைகள் சம்மதிப்பார்கள். இங்கு தான் சிறிய ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் முன்னெடுப்புகளை வலிமைப்படுத்துவதில் முக்கியமானதொரு வகிபங்கினை சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் ஆற்ற முடியும். இதே போல, காவல் துறைக்கும், சனசமூகத்திற்கும் இடையில் நல்ல வேலை செய்யும் உறவு இருந்தால், ஆயுதக் கிடங்குகள் அல்லது ஆயுதங்கள் கடத்தப்படுவதற்கான இடைத்தங்கல் வழிகள் ஆகியன பற்றிய தகவலைப் பெறுவது காவல் துறைக்கு இலகுவாக இருக்கும்.

4 ஆர்.மணி, பழிக்குப் பழிக்கு அப்பால்: யுத்தத்தின் நிழலில் நீதியை நாடுதல் (லண்டன்: பொலிற்றி, 2002), பக்கம் 56-68

# IV. காவல் துறைச் சீர்திருத்தத்தின் கஷ்டம் பற்றி கற்கப்பட்ட பாடங்கள்

காவல் துறைச் சீர்திருத்தம் ஒரு சவால்விடுக்கும் பணியாகும். காவல் துறைச் சீர்திருத்த முன்னெடுப்புக்களின் செயற்றிறனையும், நிலைத்திருத்தல்தன்மையையும் அடிக்கடி தடை செய்ததும், கஷ்டத்தை ஏற்படுத்தியதுமான பிரச்சினை களையிட்டு பங்கெடுப்பாளர்கள் கருத்துப் பரிமாறினார்கள்.

**அமுல்படுத்துனர்களின் வேறுபடும் தன்மையும், போதிய தொகையின்மையும்**

பலதரப்பட்ட பங்களிக்கும் நாடுகளிலிருந்து சர்வதேச காவல் துறைச் சீர்திருத்தவாதிகள் பெறப்படுவதுடன், உடன்படப்பட்ட சர்வதேச அணுகுமுறையொன்று இல்லாத போது, ஒழுங்கை நிலைநிறுத்துதல் குறித்து தமது சொந்த குறிப்பிட்ட முறையொன்றை இறக்குமதி செய்ய உத்தியோகத்தர்கள் முனைகின்றார்கள். அனேகமாக இந்த சர்வதேச காவல் துறை உத்தியோகத்தர்கள் மத்தியில், அனுபவம், திறன்கள், மற்றும் பயிற்சி ஆகியவற்றில் தத்ரூபமான மாறலொன்று உள்ளது. போதியளவு எண்ணிக்கையிலான பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினரைக் கண்டறிவதில் பெருமளவு பொதுச் சேவை நிறுவனங்கள் கஷ்டத்தைக் கொண்டிருப்பதால் தரக் கட்டுப்பாடு ஒரு பிரச்சினையாகவே தொடர்ந்துமிருக்கின்றது.

**மோசமான ஒருங்கிணைப்பு**

காவல் துறையைப் பொறுப்பேற்கும் பலதரப்பட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கு இடையில் போதியளவு ஒருங்கிணைப்பு இன்னுமே இல்லையாகும். அனேகமாக, ஒரு தாபனத்தின் நிகழ்ச்சிப்படுத்தலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஏனைய தாபனங்களில் உள்ள சகபாடி என்ன செய்கின்றார் என்பதையிட்டு அறிந்து வைத்திருக்கவில்லை. அனேகமாக நன்கொடையாளர்கள் தமது சொந்தத் திட்டங்களினதும், முறைமையியல்களினதும் மீது நோக்கினைக் கொண்டிருக்கிறார்கள். இது ஈடுபடுத்தல் இடம்பெறுகின்ற ஏற்கனவே பாதுகாப்பற்ற சூழலைச் சிக்கலாக்க முடியும், அல்லது அதிகரிக்க முடியும். ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் இல்லாமையினால் மோசமாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமிடலே, அதாவது ஏற்கனவே முயற்சிக்கப்பட்ட வற்றை பிரதியீடு செய்வதில் உள்ள ஏனைய முன்னெடுப்பு க்களுடன், அல்லது அபாயங்களுடன் பொருந்தாத நிகழ்ச்சித் திட்டமிடலே விளைகின்றது.

**போதிய மூலோபாயத் திட்டமிடலின்மை**

காவல் துறைச் சீர்திருத்தங்களைச் சாதிப்பதற்கு அவசியமான நோக்கங்களையும், நடவடிக்கைகளையும் திட்டமிடும் தொடர் வரிசையிலான அணுகுமுறையொன்றைப் பெருமளவிலான காவல் துறைச் சீர்திருத்தங்கள் கொண்டிருப்பதில்லை. உதாரணமாக, கொசோவோவில், சர்வதேச குடிசார் காவல் துறையினர் வந்திறங்கிய ஐந்து வருடங்களின் பின்னரும், உள்ளூர் காவல் துறைப் படைக்கு பொறுப்பினைக் கைமாற்றுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னரும் அந்த மாற்றம் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதைச் சுருக்கமாக



*அட்ரின் ஹோர்ன், ஹோர்ன் லிமிற்றெற், சியாரோ லியோன் மீது உரையாற்றுகின்றார்*

விபரிப்பதற்கான மூலோபாயத் திட்டமிடல் இன்னுமே இல்லை. காவல் துறை சீர்திருத்தமான பல்-அங்கத்திலான, பல்-முகத்திலான நடைமுறை என்பதை வழங்குகையில், மாற்ற நடைமுறையானது தொடர்வரிசைப்படுத்தப்பட வேண்டும். இது சந்ததியென்று என நீண்ட காலத்தை எடுக்கும் என சிலர் மதிப்பிடுகின்றார்கள். தெளிவான அடிமட்டங்களை குறித்துரைத்தால் அது, காவல் துறைக்கும், சனசமூகங் களுக்கும் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் வழிவகைகளாக சேவையாற்றும். இத்தகையதொரு நீண்ட நடைமுறைக்கு பொருத்தமான வகையில் பொருந்தாத குறுகிய கால நிதிப்படுத்தல் சுழற்சிகளைக் கொண்டுள்ள நன்கொடையாளர் களிடமிருந்து தொடருகின்ற ஆதரவை உறுதிப்படுத்துவதற்கு அடையாளம் காணக்கூடிய மாற்றமும் முக்கியமானதாகும்.

**அறிவின் மோசமான களஞ்சியப்படுத்தலும், சிறிதளவு 'பாடங்களைப் படித்தலும்'**

ஆளணியினரின் மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்தக் காலத்துடனும், சில வாரங்கள் என்றவாறு குறுகியதாக விளங்குகின்ற ஒப்பந்தங்களைக் கொண்டுள்ள உசாவலர்கள் மீது நம்பியிருத்தலுடனும் கட்டமைக்கப்பட்டுள்ள சீர்திருத்த நடைமுறைகளின் தன்மையானது கற்றலை ஆராய்வதையும், பதியவைப்பதையும் எதிர்க்கின்றது. சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதையும், இந்த அனுபவங்களிலிருந்து கற்கப்பட்ட பாடங்களையும் அமுல்படுத்துவதில் வேறுபட்ட செயற்பாட்டாளர்களின் (நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும்) அனுபவங்கள் பற்றி போதியளவு தகவல் பகிரங்கமாக கிட்டுவதில்லை, அல்லது அவை இலகுவில் அடையத்தக்கவை யல்ல.

**மிகச் சிறிதளவு மதிப்பாய்வு**

சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுவதில் எது செயற்படுகின்றது, எது செயற்படவில்லை என்பதைப் பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அறிவேயுள்ளது. திட்ட வடிவமைப்பினுள் மதிப்பாய்வு இன்னுமே போதியளவு பிரதான

நீரோட்டப்படுத்தப்படவுள்ளதுடன், உதாரணமாக மதிப்பாய்வின் சில சவால்கள் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான மிகவும் பொருத்தமானதும், புறமைவழாததுமான அடிமட்டங்களினதும், காட்டிகளினதும் மீது தொடர்ந்துமிருக்கின்றது. மேலதிகமாக, சக தாபனங்களினால், மறுதலையிலான விளைவுகள் எவ்வாறு உணரப்படும் என்பதற்கான கூருணர்வின் காரணமாக சர்வதேச மற்றும் விருந்தோம்பல் நாட்டுச் செயற்பாட்டாளர்களுக்கு விரிவான மதிப்பாய்வுகளைப் பெறுமதியான கற்றல் வாய்ப்புக்களை அனுமதிப்பதற்கு சர்வதேசத் தாபனங்கள் தொடர்ந்தும் தயங்குகின்றன. சர்வதேச மற்றும் விருந்தோம்பல் நாட்டுச் செயற்பாட்டாளர்களுக்கு பெறுமதியான கற்றல் வாய்ப்புக்கள் தொலைந்து போகும் என்பதே நிறுவனரீதியிலான மரியாதைகளை பாதுகாப்பதற்கான இவ்விருப்பின் கருத்தாகும்.

**போதிய நிதிப்படுத்தலின்மை**

சீர்திருத்தவாதிகள் மேம்படுத்துவதற்கு முயல்கின்ற குறிக்கோள்களுக்கும், பெறுமதிகளுக்கும், இம் மாற்றத்தை செயல்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள நிதிப்படுத்தலின் மட்டங்களுக்கும் இடையில் அபரிதமான தொடர்பின்மை உள்ளது. காவல் துறைச் சீர்திருத்தம் மலிவாக வருவதில்லை என்பதுடன், அதனுடன் சேர்ந்திருக்கும் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கு அனேகமாக நிதிப்படுத்தல் போதுமான தல்ல. நீண்ட கால அர்ப்பணிப்பு இன்றி, சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிறுத்துதல் அணுகுமுறையொன்றின் அடிப்படையிலான காவல் துறைச் சீர்திருத்தத்தின் குறிக்கோள்கள் சாதிக்கப்பட முடியாது என்பதுடன், நிலையற்ற பகுதிகளுக்கான சர்வதேச ஆதரவு குறுகிய கால தீயணைப்பை விட ஒன்றுமே தொடர்ந்திருக்காது.

**நிறுவனரீதியிலான எதிர்ப்பு**

காவல் துறையின் செயற்பாட்டுக் கலாசாரம் கவனத்திற் கெடுக்கப்பட வேண்டும். காவல் துறையினர் அனேகமாக மாற்றத்தில் எதிர்ப்பைக் காட்டுபவர்களாகவும், வெளியாருக்கு நம்பிக்கையற்றவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றார்கள். காவல் துறைச் சீர்திருத்தமானது அதிகளவு வேலையைச் செய்யுமாறு, அல்லது சௌகரியமான வேலை நடைமுறைகளுடன் தலையிடுமாறு கோருகின்ற காரணத்தினால், எதிர்ப்பினை மாற்றுவதில் அக்கறையிலான ஆர்வத்தினை உத்தியோகத்தர்கள் கொண்டிருப்பார்கள். தத்துவத்திலும், அணுகுமுறையிலும் உள்ள மாற்றங்களை தனிப்பட்ட மட்டத்தில் தயக்கத்தை காட்டுகின்ற தாபனம் முழுவதும் உட்புகுத்துவது கஷ்டமானதாகவிருக்கும். அவர்களுக்கு என்ன தெரிந்திருக் கின்றது, புதிய போக்குகளை எவ்வாறு தழுவுவது என்பதிலிருந்து தூர விலகியிருப்பது வரை தம்மை மீள் முனைப்படுத்துவதற்கு அது காவல் துறைக்கு ஒரு போராட்டமாகவே இருக்கும். இது தொடர்பில் மாற்றத்திற்கு சில சக்திகள் இணங்குகின்ற அதே வேளை, ஏனையோர் இவ்வாறாக இணங்குவதில்லை. இந்த எதிர்ப்பினை எதிர்நோக்குவதற்கு சர்வதேசச் சீர்திருத்தவாதிகள் முயலுகின்ற



கலாநிதி கிரன் பேடி, சிவிலியன் காவல் துறை ஆலோசகர்,
ஐ.நா. சமாதானப் படைச் செயற்பாடுகள் திணைக்களம்

தன்மையானது விமர்சிக்கப்பட்டது. உதாரணமாக, காவல் துறைச் சீர்திருத்தம் தொடர்பிலான அறிக்கைகள் எழுதப்பட்டுள்ள முறையொன்றினால், அனேகமாக அவற்றை வாசிப்பதற்கு வீதிகளில் பணியாற்றும் காவல் துறையினர் விரும்புவதில்லை.

## V. களத்திலிருந்து விவரணம்: நடைமுறையில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல்

சியாரே லியோன், சேர்பியா மற்றும் வட அயர்லாந்து ஆகிய மூன்று விடயங்கள் காவல் துறைச் சீர்திருத்தத்திற்கும், ஒவ்வொரு கருத்திட்டத்தின் வேறுபட்ட விரிவெல்லை மற்றும் விளைவுகள் ஆகியவற்றுக்கும் என முற்றுமுழுதான சனசமூக -அடிப்படையிலான அணுகுமுறையைச் சித்தரிக்கின்றது. உறுதியாக மதிப்பாய்வதற்கு மிகவும் ஆரம்பநிலையிலானது என்ற போதிலும், வெற்றிக்காக அனேகமாக ஆகக்குறைந்த இடமான சியாரே லியோன் பெருமளவில் ஈட்டப்பட்ட ஆதாயங்கள் முரண்பட்டவை போலிருந்தாலும், உண்மையான ஒரு கூற்றாகும்.

**சியாரே லியோன்**

1990களின் பிற்பகுதிகளில், காவல் துறைச் சீர்திருத்தத்திற்கு முற்றுமுழுவதும் உகந்ததற்றதாக சியாரே லியோன் விளங்கியதாகத் தோன்றுகின்றது.[5] ஆறு வருடங்களின் பின்னர், காவல் துறையின் நடத்தை, நியமங்கள் மற்றும் பொறுப்புக்காட்டுதல் ஆகியவற்றின் மேம்படுத்தல்கள் உட்பட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை சுதந்திரமான மதிப்பாய்வுகள் பதிவு செய்துள்ளன. அரசியல் அர்ப்பணிப்பினைப் பெற்றுக் கொள்ளுதலும், உபயோகத்திற்கு கொண்டுவருதலும், முடிவான

[5] இப்பகுதி திரு.அட்ரியர் ஹோர்னினால் செயலமர்வுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



*சியாரே லியோனில் மனித உரிமைகள் பயிற்சி*

இலக்கைக் கொண்டிருந்தாலும், இதைச் சாதிப்பதற்கு மூலோபாயத் திட்டமொன்றை உருவாக்குதலும், பின்பற்றுதலும் இது வரை வெற்றியை அடைவதற்கான முக்கியமான காரணிகளாக முன் வைக்கப்பட்டுள்ளன.

சீர்திருத்த முயற்சிக்கு தலைமை தாங்குவதற்கு வந்திறங்கிய பிரிட்டிஷ் பொதுநலவரசு அணி தீர்க்கமான நிலையொன்றில் காவல் துறை இருப்பதையும், அவர்களிடையே சவால் களுக்கான இசையும்தன்மை நிலவவில்லை என்பதையும் கண்டறிந்தது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் எப்பொழுதுமே ஒழுங்கு நிலைநிறுத்தப்படுவதில்லை. பெருமளவு ஏனைய தேசிய நிறுவனங்களைப் போல, சியாரே லியோன் காவல் துறை இலகுவாக சீரமைப்பதற்கு அப்பால் படிப்படியாக நலிவடைந்துள்ளது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் உதாசீனம் செய்யப்பட்டதனால், படையினர் சக்தியற்றவர் களாகியுள்ளதுடன், பெருமளவு காவல் துறைக் கட்டிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன், பேனைகள், கடதாசி போன்ற மிகவும் அடிப்படையிலான சாதனங்கள் இன்றி காவல் துறையினர் விளங்கினர். வருடக் கணக்காக பெரும் பாலானோர் பயிற்றுவிக்கப்படவில்லை என்பதுடன், தொழிலின் அடிப்படை அறிவைக் கூட அவர்கள் கொண்டிருக்கவில்லை. மேலும், அரசாங்கத்தின் அடக்குமுறையின் கரமாக சியாரே லியோன் காவல் படையை வரலாற்றுரீதியாக அவர்களது நிறுவனரீதியிலான ஊழலுக்கும், பொதுமக்களின் நம்பிக்கையீனத்திற்கும் இட்டுச் சென்றது.

இந்த கறைபடிந்த நம்பிக்கையைப் புதுப்பிப்பதற்கு பணியாற்றுதல் சீர்திருத்தவாதிகளின் ஆரம்பநிலையிலான நோக்கமாகும். சனசமூக அடிப்படையிலான தத்துவங்களை அமுலாக்கல் திட்டம் வலியுறுத்தியதுடன், தனிப்பட்ட நிறுவனரீதியிலான, சமூகரீதியிலான மட்டங்களில் மாற்றங்களின் தொடர்வரிசையொன்றை வலியுறுத்தியது.

தனிப்பட்ட மட்டத்தில், பாதிக்கப்பட்டவர் ஆதரவு, வீட்டில் இடம்பெறும் வன்முறை, மற்றும் குற்றத்தைத் தடுத்தல் ஆகியன உட்பட ‘உள்ளூர் தேவைகளின்’ பிரச்சினைகளில் தமது தகுதிகளை மேம்படுத்துவது மீது உத்தியோகத்தர் களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. புதிய ஆட்சேர்ப்புக்கள் மீது மட்டும் அன்றி, ஆனால், திறன்கள் சீர்கேடாக வளர்ந்த, அல்லது ஒரு போதுமே பயிற்றுவிக்கப்படாத நடைமுறையிலான உத்தியோகத்தர்களின் மீதும் பயிற்சி நோக்கினைக் கொண்டிருக்கவில்லை.

‘சனசமூக அடிப்படையிலான’ தத்துவமொன்றைப் பதிக்கு முகமாக தாபனம் விஸ்தாரமாக மீள் கட்டமைக்கப்பட்டது. ஊடுருவிச் செல்ல முடியாததும், தடுமாற்றத்திலுமானதுமான முகாமைத்துவக் கட்டமைப்புகள் அதிகளவு ஒளிவு மறைவற்ற தாகச் செய்யப்பட்டதுடன், படையினுள் பதவியுயர்வும், ஆட்சேர்ப்பும் மிக நெருங்கிய தோழமையை விட தரப்படுத்தப்பட்ட தகுதி-அடிப்படையிலான நடைமுறைகள் மீதே அடிப்படையைக் கொண்டிருந்தன. நிதிசார் முகாமைத்துவத்தின் புதியதொரு முறைமை ஊழலை ஒழிப்பதற்கான முயற்சியொன்றாக உரிய இடத்தில் வைக்கப்பட்டது. புதிய நடைமுறைகளின் விளைவொன்றாக உத்தியோகத்தர்களுக்கு அதிகளவில் பொறுப்பு வழங்கப்பட்டது. இதன் மூலம் பொது மக்கள் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய தாகவுள்ளது.

காவல் துறையிலிருந்து நீண்ட காலமாக ஒதுக்கப்பட்டிருந்த சனசமூகங்களை அடைவதற்கான அயராத முயற்சியொன்றை படை எடுத்தது. மக்களின் உரிமைகள், காவல் துறையின் வகிபங்கு மற்றும் சனசமூக பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும் ஆதரவளிப்பதற்கு காவல் துறை பயன்படுத்தக்கூடிய முறைகள் ஆகியன பற்றிய விழிப்பியலை உயர்த்துவது மூலம் நடைமுறை ஆரம்பமாகியது. குறிப்பாக, ஊறுபடத்தக்கவர்கள், சிவில் யுத்தத்தின் போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்ற ஈடில்லாத வகையில் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் மீது விசேட கரிசனை செலுத்தப்பட்டது.

பொது மக்களைச் சம்பந்தப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் மத்தியில், உள்ளூர் ஒழுங்கை நிலை நிறுத்துதலில் குரலையும், குற்றத்தைத் தடுப்பதில் ஒரு வகிபங்கினையும், மற்றும் காவல் துறையைக் கண்காணித்தலின் வழிவகைகளையும் சனசமூகங்களுக்கு வழங்குவதில் சிவில் சமூக பொதுமன்றமும் ஒன்றாகும்.

மாற்றத்திற்கு நிறுவனரீதியிலான தாக்குப் பிடித்தலை வெல்வதற்கு தேசிய அரசியல் மனவுறுதி முக்கியமானதாகும். நிதிசார்ரீதியில் எந்தளவு சிறப்பாக பேறு அளிக்கப்பட்டுள்ளது என்றில்லாமல், சர்வதேச தலையீடுகள் அது இன்றி விரைவாகவே சக்தியை இழந்துவிடும். தொடர்கின்ற அரசாங்க ஆதரவு மீது சீர்திருத்த நடைமுறையானது நிபந்தனைக்குரிய தாகும்.

**சேர்பியா**

சேர்பியாவில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான புதியதும், முற்றுமுழுதானதும், சனசமூக அடிப்படையிலானதுமான

அணுகுமுறையொன்றை பதிக்கின்ற நடைமுறை ஒரு தொகை சவால்களுக்கு நிறுவன மட்டத்திலான சீர்திருத்தங்களுக்கான தேவைக்கு கொஞ்சங்கூட இல்லாமல் முகம் கொடுத்துள்ளது.[6] மிலோ சேவிக் நிருவாகத்தின் போது அரசியல் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்ட அழுத்தத்திலிருந்து 2004இன் சேர்பிய காவல்படை மிகத் தெளிவான வித்தியாசமாகவிருந்த அதே வேளை, உண்மையான நவீனமானதும், பிரதிநிதித்துவத்திலானதும், ஜனநாயகத் திலானதுமான காவல் துறைச் சேவையைக் கொண்டதாக நாட்டின் உள்துறை அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை இனிமேல் தான் அடைய வேண்டியுள்ளது. ஐரோப்பாவில் உள்ள பந்தோபஸ்து, ஒத்துழைப்புக்கான தாபனத்தின் உதவியுடன், விசேடமான பயிற்சித் திட்டங்கள் ஊடாக தனிப்பட்ட ஆற்றலளவையும், தனிப்பட்ட நேர்மையையும் மேம்படுத்துவதில் முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும், நிறுவனரீதியிலான ஆற்றலளவு மீதான உடனியங்குகின்ற நோக்கொன்று இல்லாமையானது (சியாரே லியோனின் விடயத்தைப் போன்று) உத்தியோகத்தர் களின் தனிப்பட்ட ஆற்றலளவை விருத்தி செய்வது மீது செய்யப்பட்ட முன்னேற்றத்தின் உத்தேசமான தாக்கம் போதியளவு முகாமைத்துவமும், நிறுவனரீதியிலான கட்டமைப்புகளும் இன்மையின், அல்லது இத்தகைய மாற்றங்களுக்கு (மூலோபாயத் திட்டமிடல், மூலவள முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள் ஆகிய துறைகளில் உள்ளவாறு போன்று) ஆதரவளிப்பதற்கு விருத்தி செய்யப்பட்ட சட்ட/நடைமுறையிலான திட்டவரை இல்லாமையின் காரணமாக மட்டுப்பட்டிருந்தது என்பதாகவே கருதப்படுகின்றது. முழுமையான சீர்திருத்த நடைமுறையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களினதும், புதிய தொழில்நுட்பங்கள் கற்பிக்கப்பட்டு, அவற்றைப் பயன்படுத்த முடியாதவர்களினதும் செயல்நோக்கம் இழக்கச் செய்ததே முடிவாகும்.

சேவையின் பிரதிநிதித்துவத்தன்மையையும், சனசமூக நோக்கினையும் அதிகரிப்பதிலான குறிக்கோளுடன் தென் சேர்பியாவில் அதிக பெண் காவல் படை உத்தியோகத்தர் களின் அறிமுகத்துடனும், பல்-இனத்துவ ஒழுங்கை நிலை நாட்டுதலின் விருத்தியுடனும் கடந்த ஒரு தொகை ஆண்டுகளுக்கு மேலாக முன்னேற்றம் செய்யப்பட்டுள்ளது. நவீன காவல் துறைப் பயிற்சி நெறிகளைக் கொண்ட திட்டமொன்றுடன் இணைந்து ஒரு தொகையிலான குறிப்பான சனசமூக ஒழுங்கை நிலைநாட்டுதல் முன்னோடி அமைவிடங்களின் அறிமுகமானது சேர்பிய மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதை நோக்கி உறுதியான தன்மை யொன்றில் பங்களித்துள்ளது.

எனினும், சேர்பியாவில் காவல் துறைச் சீர்திருத்த நடைமுறைக்காக குறிப்பிட்ட சவால்கள் தொடர்ந்தும் முன்னேயுள்ளன. உண்மையான ஒளிவுமறைவற்ற காவல் துறை சேவையொன்றை நோக்கிய முன்னேற்றத்தை காவல் துறை பொறுப்புத்தன்மைக்காக விருத்தி செய்யப்பட்ட கட்டமைப்புக்கள் இன்மையானது தடுத்துள்ள அதே வேளை, போதிய நிதிசார் முகாமைத்துவ முறைமையொன்று இன்மையுடன் இணைந்துள்ள அரும்பு நிலையிலான நிருவாகம் மூலவளங்களின் செயற்றிறனான பயனைத் தொடர்ந்தும் குறைத்து மதிப்பிடுகின்றது. சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் அமுலாக்கத்தை உயர்ந்தளவில் மையப்படுத்தியுள்ள முகாமைத்துவக் கட்டமைப்பொன்று தலையிடுகின்ற அதே வேளை, வழக்கொழிந்த முகாமைத்துவ நடைமுறைகளும், ஒளிவுமறைவற்ற மேம்படுத்தல் நடைமுறைகள் இன்மையும் புதிதாகச் சேர்க்கப்பட்ட திறமையானவர்களுக்கு சாத்தியவளமான தொழில் விருப்பொன்றே காவல் துறைச் சேவையாகும் என்ற நம்பிக்கையை அடக்கி வைக்கின்றது. காவல் துறையின் அரசியல் மற்றும் செயற்பாட்டு அம்சங்களுக்கு இடையில் தெளிவானதொரு பிரிவு இன்மையானது திறமையாகக் கையாள்வதற்கு உத்தேசமானரீதியில் வெளிப்படையான தாகும். சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுவதை அமுல்படுத்துவதற்காக மேலும் சட்டத்திலானதும், நடைமுறை யிலானதுமான மாற்றங்கள் அவசியமானதாகும். முறைமையை முழுமையாக சீர்படுத்துவதை விட, வழக்கொழிந்த முறைமை யொன்றின் மீது அடிப்படையைக் கொண்ட சட்ட வரைச் சட்டத்தை தரமுயர்த்துவது மீதே சட்ட மாற்றங்கள் இன்று வரை பெரிதுமே நோக்கினைக் கொண்டிருந்தன.

சர்வதேச சனசமூகமும் ஆற்றுவதற்கு ஒரு முக்கியமான வகிபங்கொன்றைக் கொண்டுள்ளது. நன்கொடை ஒருங்கிணைப்பும், நடுநிலையும் சிறப்பாகச் செய்யப்படலாம் என்பதுடன், செய்யப்படவும் வேண்டும். பொதுவான குறிக்கோள் ஒன்றுக்கு சிறிதளவு இறைமையை விட்டுவிடுவதற்கு சில வழிகளில் நன்கொடையாளர்களை வேண்டுகின்ற நன்கொடையாளரை ஈடுபடுத்துவதற்கான உடன்படப்பட்ட வரைச்சட்டமொன்றைக் கொண்டிருப்பதற்கான அவசியம் சீர்திருத்த நடைமுறை மீது உறுதியான தாக்கமொன்றைச் சர்வதேச சமூகம் கொண்டிருக்க வேண்டுமானால், ஏற்படுகின்றது.

**வட அயர்லாந்து**

காவல் துறையை நோக்கிய பொது மக்களின் போக்குகளை மீள் முனைப்படுத்துவதிலும், எதிர்பார்க்கப்பட்ட சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதன் தத்துவத்தினதும் காரணகர்த்தாக்களினால் விரும்பப்படுகின்ற அதன் சீர்திருத்தத்தினதும் அளவுக்கு பொது மக்களை சம்பந்தப்படச் செய்வதில் உள்ள கஷ்டத்தை வட அயர்லாந்தின் உதாரணம் கீழ் கோடிட்டுக் காட்டுகின்றது.

மாகாணத்தின் 1998 பெரிய வெள்ளி உடன்படிக்கையின் முக்கியமான அடிப்படைக்கூறான றோயல் அல்ஸ்டர் காவல்படைக்கான சீர்திருத்தம் விளங்குகின்றது.

[6] இப்பகுதி 'சமாதானத்திலிருந்து ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் வரை பல் - இனத்துவ, மோதலுக்குப் பின்னரான, மாற்று நிலையிலான சூழலொன்றில் காவல் துறை சீர்திருத்தம்: சேர்பியாவின் அனுபவம்'' என்ற கலாநிதி மார்க் டவுனஸினால் செயலமர்வுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட நிபுணத்துவக் குழாமொன்றில் விதந்துரைப்புக்களைத் தொடர்ந்து, வட அயர்லாந்தின் அதிக நடுநிலையான காவல் துறைச் சேவை ஒன்றினுள் படை மாற்றப்படவிருந்ததுடன், காவல் துறைப் பதவிகளில் கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து சனசமூகங்களின் சமமான பிரதிநிதித்துவத்தின் இலக்கொன்று முன் வைக்கப்பட்டது. 2002 ஏப்ரலில் புதிய படை முறைமையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வரலாற்றுரீதியாக குறைத்துப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கத்தோலிக்க தரப்புக்களின் மையக் கோரிக்கையொன்றான மேற்பார்வை மற்றும் தீர்மானமெடுக்கும் நடைமுறைகளில் விஸ்தாரமான சனசமூக சம்பந்தம் வலியுறுத்தப்பட்டது. புதிய பொதுமன்றங்கள் உருவாக்கப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகளையும், சுயேச்சையாளர்களையும் கொண்ட உள்ளூர் சபையொன்றான வட அயர்லாந்து ஒழுக்கத்தை நிலைநாட்டும் சபை விஸ்தாராமான மேற்பார்வை அதிகாரங் களைக் கொண்டுள்ளது. குறைந்த மட்டமொன்றில், அரசியல்



*கென்யாவில் காவல் நிலைய எல்லை*

## கென்யாவில் சே.்.பர்வேர்ள்ட்டும், சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலும்

சேர்.்.பர்வேள்ட் மற்றும் பந்தோபஸ்து ஆராய்ச்சி தகவல் நிலையம் மற்றும் பீஸ்நெற் ஆகியன உட்பட உள்ளூர் சிவில் சமூக தாபனங்கள் ஆகியவற்றுடனான தோழமையுடன் சனசமூக-அடிப்படையில் காவல் துறையின் பேராவாவுள்ள திட்டமொன்றை கென்ய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

காவல்துறைக்கும், உள்ளூர் சனசமூகங்களுக்கும் பொதுவான வழிகாட்டல்களை வழங்கும் சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் மீது தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்வதே திட்டமாகும். அவர்களது வகிபங்குகளைத் தெளிவுபடுத்தவும், அவர்களது பணியின் மையத்தில் சேவைகளின் திருந்திய விநியோகத்தை இடவும் கென்யா காவல்படை மற்றும் நிருவாகக் காவல்படை என்ற கென்யாவில் உள்ள இரு காவல் துறைப் படைகளுக்கான மூலோபாயத் திட்டங்களை விருத்தி செய்வதன் மூலம் இது பூர்த்தி செய்யப்படுகின்றது.

அத்துடன், சிரேஷ்ட காவல் துறை உத்தியோகத்தர்களையும், புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களையும், சனசமூகத் தலைவர்களையும் பயிற்றுவிப்பதற்காக சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிறுத்துவதில் ஒரு புதிய பயிற்சி பாடவிதானமொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது. சீர்திருத்தத் திட்டத்தின் விழிப்பியலை உயர்த்துவதற்கும், காவல் துறையுடன் பணியாற்றுவதற்கு மக்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் ஊடக எல்லை கடந்த முன்னோக்குடனும், மக்கள் கல்வியுடனும் இப்பணி இணைந்துள்ளது.

ஒன்று நகரம், மற்றது கிராமம் என்றவாறு இரு தெரிவுசெய்யப்பட்ட முன்னோடித் திட்டங்களில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது. இணைந்த குற்றத் தடுப்பினையும், பாதிக்கப்பட்டவர் ஆதரவு மூலோபாயங்களையும் விருத்தி செய்வதற்கு காவல் துறை உத்தியோகத்தர்களையும், சனசமூகத் தலைவர்களையும் ஒன்றாகக் கொண்டு வருவதில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் பொதுமன்றங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இந்த அமைவிடங்களில் குற்றத்தில் கணிசமானளவு வீழ்ச்சியொன்றை காவல் துறையினர் அறிவிப்பதுடன், இந்த அணுகுமுறையை நாடு முழுவதும் பரப்புவதற்கு அரசாங்கம் தற்போது ஆர்வம் காட்டுகின்றது.

குறிப்பிடத்தக்க சவால்களுக்கு சீர்திருத்த நடைமுறை இன்னுமே முகம் கொடுக்கின்றது. ஆனால், இந்த ஊக்கமளிக்கின்ற அபிவிருத்திகள் முன்னேற்றத்திற்கான சிறந்ததொரு அடிப்படையை வழங்குகின்றது. ஒரு தொகை பாடங்கள் கற்கப்பட்டுள்ளன: 1) வெற்றிகரமான சீர்திருத்தங்களுக்கு குறிப்பிடத்தக்க உரித்துரிமையும், அரசாங்கத்தினுள் ஆதரவும் அவசியமாகும். சீர்திருத்தத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட புதிய அரசாங்கமொன்றின் அரசியல் ஆதரவும், மேற்பார்வையையும், வழங்குவதற்கு அரசாங்கத்தினுள் உயர் மட்ட உறுப்பொன்றைத் தாபித்தலும் முன்னேற்றத்திற்கான இயலத்தக்க சூழலொன்றை உருவாக்கியுள்ளது. 2) வேறுபட்ட முன்னெடுப்புகளை முன்னே கொண்டு செல்லக்கூடிய (உதாரணம்: பயிற்சியும், கொள்கை முன்னேற்றமும்) விரிவான திட்டமொன்றை விருத்தி செய்வதில் தெளிவான நன்மைகள் உள்ளன. 3) அமுலாக்கத்திற்கு ஆதரவிள்பபதற்காக விருந்தோம்பும் அரசாங்கம், சர்வதேச மற்றும் உள்ளூர் சிவில் சமூகத் தாபனங்கள் ஆகியவற்றுக்கு இடையில் தோழமையொன்றைத் தாபிப்பது முக்கியமானதாகும்.

வாதிகளையும், குடிசார் சமூகப் பிரதிநிதிகளையும் கொண்ட இருபத்தியாறு மாவட்ட ஒழுங்கை நிலைநிறுத்துதல் தோழமைகள் உள்ளூர் மேற்பார்வை அதிகாரங்களையும், உள்ளூர் ஒழுங்கை நிலைநிறுத்துதல் முன்னுரிமைகளையும் முன்வைப்பதில் பாரியதொரு வகிபங்கினையும் கொண்டுள்ளன.

சகல நிறுவனங்களும் உரிய இடத்தில் உள்ள அதே வேளை, அவை இனிமேல்தான் தமது ஆற்றலளவை நிறைவேற்ற வுள்ளன. இதற்கு ஓரளவுக்கு அவை அரசியல் ஆதரவை கொண்டிருக்காததே காரணமாகும். ஒழுங்கை நிலை நாட்டுதல் ஆழமான பிரித்துணரப்படும் பிரச்சனையாகத் தொடர்ந்து மிருப்பதுடன், சந்ததிகளுக்கு மேலாக மீள்வலியுறுத்தப்பட்ட போக்குகள் சீர்குலைவடைவதற்கு மெதுவாக விளங்கி யுள்ளது. கத்தோலிக்க ஆதரவை அடைவதற்கு கஷ்டம் என நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது அச் சனசமூகத்தில் இருந்து தொடர்ந்தும் குறைவாகவே இருக்கின்றது. பாரிய கத்தோலிக்க கட்சியும், மாகாணத்தில் உள்ள இரண்டாவது பாரிய அரசியல் கட்சியுமான கசின் பெயின் சீர்திருத்த நடைமுறையை ஆதரவளிப்பதற்கு இன்னுமே உடன்படவில்லை. இது வெகு தூரம் செல்லவில்லை என அது எண்ணுவதுடன், ஏதாவது பொறுப்புக்காட்டும் மற்றும் மேற்பார்வை சபைகளில் ஆசனங்களை எடுப்பதற்கும் மறுத்துள்ளது. சீர்திருத்தங்களின் அமுலாக்கல் மீது நாளாந்த விவாதத்தின் அங்கமாக அதன் குரல் விளங்கவில்லை என்பதே இதன் அர்த்தமாகும். சம்பந்தமும் உத்தேசமானரீதியில் தனிப்பட்ட விதமாக ஆபத்தானதாகும். மாவட்ட ஒழுங்கை நிலைநிறுத்துதல் தோழமையின் உறுப்பினர்கள் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டு ள்ளதுடன், பயமுறுத்தப்பட்டுமுள்ளனர். இன்னொரு பிரச்சனை இன்னுமே முற்றிலும் பகிரங்க அக்கறையின்மையாகும். பொதுமக்களின் சம்பந்தமும், அக்கறையும் சனசமூக அடிப்படை அணுகுமுறையொன்றின் உள்ளக அபிப்பிராயமாகும். ஆனால், இது ஈடுபடுத்துவதற்கு கஷ்டமானதாகத் தோன்றுகின்றது. விஸ்தாரமான விதத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள போதிலும், சனசமூகத்தை ஈடுபடுத்துவதற்காக கூட்டங்கள் வெற்று அறைகளில் இடம்பெறுகின்றன. பொதுசன ஆதரவுக்கும், சம்பந்தத்திற்கும் பதிலாக, வட அயர்லாந்தில் சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலை உணர்ச்சியின்மையும், ஐயுறவு மனப்பான்மையும் சித்தரிக்கின்றன.

## VI. சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்: ஓர் அமுல்படுத்தல் வரைச்சட்டம்

மோதல் முகாமைத்துவ மூலோபாயமொன்றின் அங்கமாக காவல் துறைச் சீர்திருத்தத்தின் வளர்ச்சியுறும் முக்கியத்துவத்தை வழங்குகையிலும், சீர்திருத்தத்தை மேற்கொள்வதில் தாபனங்கள் வியாபித்திருத்தலை வழங்குகையிலும் சீர்திருத்தம் கட்டமைக்கப்படுவதற்கு சுற்ற வரவுள்ள வரைத்திட்டமொன்றுக்கான அவசியம் முக்கிய மானதாகும். காவல் துறைச் சீர்திருத்தத்திற்கான வரைத்திட்டமொன்று இன்னுமே காணப்படவில்லை என முதல் நாளின் வாதப்பிரதிவாதங்கள் சுட்டிச்சொல்லின. ஒரு சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல் திட்டத்தை எவ்வாறு, எப்பொழுது, யாருடன் அமுல்படுத்துவது என்பது மீதான வழிகாட்டலை வழங்குவதை இரண்டாவது நாளின் வாதப் பிரதிவாதங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

முகாமைத்துவத்தையும், சூழ்நிலைக்கேற்ற பிரயோகத்தன்மை யையும், திட்டமிடலையும் வலியுறுத்துகின்ற அமுலாக்கல் வரைத்திட்டமொன்றை பங்கெடுப்பாளர்கள் விருத்தி செய்தனர். சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலை அமுல்படுத்துவது தொடர்பில் குறிப்பான குணவியல்புகளை அடையாளங் காண்பது திட்டமிடல் நடைமுறைக்கு அவசியமாகும். ஈடுபடுத்தலின் நேரகாலத்தையும், நீளத்தையும், மிகவும் பொருத்தமான பிரவேசப் புள்ளிகளையும் (உதாரணம்: தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்தல், உள்ளூர் முன்னோடிக் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் அல்லது இரண்டையும் பணி ஆரம்பிக்க வேண்டுமா?) ஒழுங்கை நிலைநிறுத்துதலின் சில அம்சங்களுக்கு (உதாரணம்: ஊழல் அல்லது மனித உரிமைகள் துஷ்பிரயோகம்) அதிகளவு வலியுறுத்தல் அவசியமா என்பதையும் இட்டு ஒழுங்கமைப்பு உருக்கொடுக்கும்.

ஈடுபடுத்தலை வழிகாட்ட வேண்டியதும், கூடிமுக்கியமான வெற்றிக்' காரணிகள் தொடரொன்றைப் பின்பற்றுவதும், வெற்றியின் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடத்தக்களவில் மேம்படுத்துகின்றதுமான சமூகமளித்தலின், அல்லது பகுதியளவிலான சமூகமளித்தலின் எட்டு முக்கியமான தத்துவங்களை அடையாளங் காண்பதன் மூலம் வரைத்திட்டம் ஆரம்பமாகின்றது.

ஈடுபடுத்தலுக்கு முந்திய பகுப்பாய்வும், மதிப்பீடும்ஸ்ரீ திட்டமிடுதல்ஸ்ரீ அமுலாக்கத்தை முகாமைத்துவப்படுத்துதல்ஸ்ரீ ஆய்வும், பின்னடைவும் ஆகிய நான்கு கட்டங்களாக அமுலாக்கல் வரைத்திட்டம் முறிவடைந்துள்ளது.

### அ. முக்கியமான தத்துவங்கள்

ஈடுபடுத்தலின் சகல கட்டங்கள் முழுவதும் ஒரு தொகை யிலான முக்கியமான தத்துவங்கள் பிரயோகமாகின்றன.

1. சீர்திருத்த நடைமுறையை வழிநடத்தாமலும், அதில் ஆதிக்கம் செலுத்தாமலும் ஆனால் ஆதரவளிப்பதும், வசதிப்படுத்துவதுமே சர்வதேச செயற்பாட்டாளர்களின் வகிபங்காகும். திட்டமிடுதல், அமுலாக்கல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல் ஆகிய நடைமுறைகள் முழுவதும் நடைமுறைச் சாத்தியமானளவு பெருமளவு உள்ளூர் பங்குதாரர்கள் சம்பந்தப்படுவது அவசியமானதாகும்.

2. சம்பந்தத்திற்கு ஏற்ப வரைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். சீர்திருத்த நடைமுறை முழுவதும் வளைந்து கொடுப்பதும், ஒளிவுமறைவற்றதும், ஆலோசனைக் குரியதுமான அணுகுமுறையை இது வேண்டுகின்றது.

3. காவல் துறையினர் மற்றும் பொது மக்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலுக்கு போதியளவு கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒன்றின் மீது மற்றொன்றை வலியுறுத்துகின்ற ஒரு நடைமுறை பொருத்தமற்றதாக விருக்கும்.

4. சம்பந்தப்பட்ட சர்வதேச முகவராண்மைகளுக்கும், விருந்தோம்பல் அரசாங்கத்திற்கும் இடையில் பொதுவானதொரு புரிந்துணர்வு இருக்க வேண்டும். ஆரம்பத்தில் இருந்து இது வெளிப்படையாக செய்யப்படாவிட்டால், முரண்பட்டதன்மை, ஒன்றன் மேல் ஒன்று படிதல், மற்றும் குழப்பம் ஆகிய அபாயங்கள் ஏற்படுகின்றன.

5. நடைமுறையில் சகல கட்டங்களிலும் வேறுபட்ட மட்டங்களிலான காவல் துறை ஆளணியினரின் (உயர் முகாமைத்துவத்தினர் மட்டுமன்றி) சம்பந்தமானது நிலைத்திருத்தலுக்கு முக்கியமானதாகும்.

6. சனசமூக-அடிப்படையிலான காவல் துறைச் சீர்திருத்தம் தனிமைப்படுத்தலில் இடம்பெறாமல் ஆனால், பரந்த குற்றவியல் நீதிமுறைமைச் சீர்திருத்தத்தின் அங்கமாக இடம்பெற வேண்டும். இதன் கருத்து என்னவெனில், வேறு குற்றவியல் நீதி நிறுவனங்களிலிருந்து உசாவுகைகளிலும், மதிப்பீடுகளிலும் முக்கியமான செயற்பாட்டாளர்களை உள்ளடக்குவதுடன், வேறு முன்னெடுப்புகளுடன் ஒத்துழைப்புக்களை நாடு வதாகும்.

7. திட்டம் உண்மை நிலையிலானதாகவும், பொருந்து வதற்கு மூலவளங்களுடன் சாத்தியவளமானதாகவும் விளங்குவது அவசியமானதாகும்.

8. ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் முக்கியமானதாகும். சர்வதேச ஆதரவு முடிவடையும் போது, முன்னேற்றம் நிலைத்திருக்கத்தக்கதாக விளங்க வேண்டும்.

## ஆ. முக்கியமான வெற்றியிலான காரணிகள்

இக் காரணிகளை முன்வைக்கும் மிகவும் பலமானவை சிறந்தவையாகவும், சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலை பொறுப்பேற்பதற்கான சூழலையும் கொண்டவையாகவும் இருக்கின்றன.

### 1. நாட்டில் ஒழுங்கின் ஆகக் குறைந்த மட்டம்

காவல் துறைச் சீர்திருத்தத்தைப் பொறுப்பேற்பதற்கு குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலம் வரை அனேகமாக தக்கவைக்கக்கூடிய ஒழுங்கின் ஆகக் குறைந்த மட்டம் அவசியமாகும். விரைவிலேயே ஒன்று திரட்டுவதற்கும், இச் சூழ்நிலைகளில் பணியாற்று வதற்கும் அவசியமான சாதனங்களையும், தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைப்பையும் கொண்டிருப்பதன் மூலம் இத்தகைய வாய்ப்புக்களுக்கு பதிலிறுப்பதற்கு சர்வதேச சமூகம் போதியளவு சுறுசுறுப்பானதாக இருப்பது இன்றியமையாததாகும்.

### 2. உகந்ததொரு சம்பந்தமும், மாற்றத்திற்கான செய்துகாட்டப்பட்ட அரசியல் மனவுறுதியும்

அரசாங்கத்தினதும், காவல் படையினதும் அந்தஸ்தினுள் தலைவர்கள் மத்தியில் காவல் துறை சீர்திருத்த நடைமுறையொன்றுக்கான சிறிதளவு தேசிய அரசியல் ஆதரவுக்கான அவசியமுள்ளது. ஆரம்பத்தில் காவல் துறையினுள் சிரேஷ்ட மட்டங்களிலும், நடுத்தர முகாமைத்துவ மற்றும் குறைந்த மட்டங்களிலும் இணக்கமின்மையினால் இது சான்று பகரப்பட முடியும். காவல் துறை-சனசமூக உறவுகளை மேம்படுத்துவதற்கான இந்த அர்ப்பணிப்பு காவல் துறைப் படையினுள் மோசடி, மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்கள், அதிகாரத்தின் மிதமிஞ்சிய உபயோகம் போன்ற கடுமையான பிரச்சனைகள் (அத்துடன் சங்கேதமானரீதியில் சக்திவாய்ந்த) மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்தினதும் மற்றும் காவல் துறைப் புள்ளிகளினதும் அங்கமாக இணக்கத்தினதும், சீர்திருத்த நடைமுறையொன்றுக்கு ஆதரவளிப்ப தற்காக மூலவளங்களின் ஒதுக்கீட்டினதும், பொது மக்களுக்கு காவல் துறையினர் பொறுப்புக் காட்டுவதை நடவடிக்கைகளை எடுப்பதினதும் மூலம் அளவிடப்பட முடியும்.

இத்தகைய நடவடிக்கைகளும், அர்ப்பணிப்பும் சர்வதேச ராஜதந்திரிகள், உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் சர்வதேச மற்றும் உள்ளூர் சிவில் சமூக தாபனங்கள் உட்பட நாட்டில் உள்ள வேறு விஷயம் தெரிந்த செயற்பாட்டாளர்களினாலும், தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தாபனங்களினாலும் உறுதிப்படுத்தப்பட முடியும்.

### 3. காவல் துறையினுள் அடிப்படை முகாமைத்துவத் திறன்கள்

சீர்திருத்த நடைமுறையொன்றைப் பொறுப்பேற்பதற்கு அடிப்படை முகாமைத்துவ ஆற்றலளவு முக்கிய மானதாகும். முகாமைத்துவத் திறன்கள் இல்லாதிருந்தால் இது ஆற்றலளவை கட்டியெழுப்புதலின் முன்னுரிமையாக வலியுறுத்தப்பட முடியும்.

### 4. சிவில் சமூகச் சம்பந்தம்

பொதுசன, அல்லது சிவில் தோழமையின் சிறிதளவு வடிவத்துடன் காவல் துறை ஈடுபட்டால் மட்டுமே சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதை சக்திமிக்கதாக அமுல்படுத்த முடியும். காவல் துறையுடன் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து பிரச்சனைகள் மீது ஈடுபடுவதற்கு சிவில் சமூக ஆற்றலளவின் சிறிதளவு வடிவம் அவசியமானதாகும். இதைச் செய்வதற்கு இயலுமானதாக இருப்பதற்கு

அவற்றுக்கு அரசியல் இடைவெளி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5. **நன்கொடையாளர் ஆதரவும், ஒருங்கிணைப்பும்**

பரஸ்பரமான ஆதரவளிப்பிலான தன்மையொன்றில் தமது திட்டங்களையும், மூலோபாயங்களையும், செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கு நன்கொடையாளர்கள் மத்தியில் தயார்நிலை முக்கியமானதாகும். நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரை சீர்திருத்த நடைமுறையின் மார்க்கத்தில் நிலைத்திருப்பதற்கும், போதியளவு மூலவளங்களை வழங்குவதற்கும் நன்கொடையாளர்களின் அர்ப்பணிப்பானது நிறைவேற்றப்பட முடியாத எதிர்பார்ப்புகளை உருவாக்குவதை தவிர்க்குமுகமாக முக்கியமானதாகும்.

## இ. அமுலாக்கல் வரைத்திட்டம்

### கட்டம் 1: ஈடுபடுத்தலின் முன்னரான பகுப்பாய்வும், மதிப்பீடும்

உத்தேசமான ஈடுபடுத்தலின் நுட்ப வேறுபாட்டிலான வடிவமைப்பையும், திட்டமிடலையும், அமுலாக்கத்தையும், கண்காணித்தலையும், மதிப்பாய்தலையும் அறிவிப்பதற்கு முழுமையான சந்தர்ப்பத்திற்கேற்ற பகுப்பாய்வும், தேவைகள் மற்றும் மூலவளங்கள் மதிப்பீடும் முக்கியமானவையாகும். காவல் துறையும், அரசாங்கமும், மற்றும் சிவில் சமூகமும் கருத்தாழமிக்கதாக சம்பந்தப்படுவதை உறுதிப்படுத்துமுகமாக, மதிப்பீட்டு நடைமுறையானது பரந்ததாகவும், ஆலோசனைக் குரியதாகவும் விளங்க வேண்டும். மதிப்பீடானது விரைவாக்கப் படலாகாது என்பதும், தேவைகளும், முன்னுரிமைகளும் எவை என்று முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட அனுமானங்களை குழாம் கொண்டிருக்கக்கூடாது என்பதும் முக்கியமானதாகும்.

காவல் துறையினதும், குற்றத்தினதும் ஒடுங்கிய கரிசனைகளுக்கு அப்பால் செல்லுகையில், காவல் துறையும், சனசமூகங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பினைக் கொண்டுள்ள பரந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலையையிட்டு பகுப்பாய்வு விசாரிக்க வேண்டும். மதிப்பீட்டினை மேற்கொள்பவர்கள் பரந்த வீச்செல்லையிலான திறன்களைக் கொண்டிருக்க வேண்டும். அதே வேளை காவல் துறை அனுபவத்துடன் உள்ளவர்கள் கைவசம் சமூகத்தின் சமூகவியல், சட்ட, வரலாற்று மற்றும் மனித சாஸ்திரவியல் அறிவை மதிப்பீட்டாளர்கள் கொண்டிருக்க வேண்டும். இறுதியான திட்டம் நிதிசார்ரீதியில் உண்மைநிலையிலானதாக இருப்பதன் காரணமாக, நிதிப் பின்னணியுடன் உள்ளவர்கள் சம்பந்தப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

ஒழுங்கை நிலைநிறுத்துவதில் உள்ள பால்நிலைப் பரிமாணத்தையும், பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் மற்றும் நீதிக்குமான பெண்களின் அடைதல் தொடர்பான பிரச்சனைகளையும் மதிப்பீடுகளும், பகுப்பாய்வுகளும் கருத்திற்கு எடுக்க வேண்டும். பெண்களின் வாழ்வையும், அந்தஸ்தையும் பாரியளவில் பாதிக்கின்ற சில பிரச்சினைகளை மரபுரீதியான சட்டமும், சமய அனுஷ்டானங்களும் அனேகமாக ஆட்சிப்படுத்துகின்றன என்பதனால் இது குறிப்பாக முக்கியமானதாகும். இது ஆதன உரித்துரிமை, விதவை களினதும், பிள்ளைகளினதும் அந்தஸ்து, பிள்ளைகளின் பாதுகாவல், சட்டபூர்வதன்மை மற்றும் சுவீகாரங்கள் ஆகியன உட்பட திருமண மற்றும் விவாகரத்து விடயங்கள், வெவ்வேறு இராஜ்யங்களுக்கிடையிலான வாரிசுரிமை, மற்றும் வெவ்வேறு இராஜ்யங்களுக்கிடையிலான சொத்துக்களின் நிருவாகம் ஆகியனவற்றை உள்ளடக்குகின்றது. நீதிக்கும் பெண்களின் அடைதலானது அவர்கள் சொந்தக் குடும்பங்களையும், அவர்கள் வாழுகின்ற பகுதிகளில் உள்ள பாரம்பரியமான கட்டமைப்புகளையும், காவல் துறையையும், நீதிமன்ற ஆளணியினரையும், நீதிவான்களையும், மாவட்ட நிருவாக ஆளணியினரையும் உள்ளடக்க வேண்டும்.[7]

மதிப்பீடு இன்றியமையாத வகையில் ஒன்பது அம்சங்களை அடக்க வேண்டும்:

*1.1. ஆபத்து மற்றும் மோதல் பகுப்பாய்வு*

பாதுகாப்பின்மையினதும், குற்றத்தினதும் காரணிகளைப் புரிந்து கொள்வதற்கான சம்பந்தத்தையும், பகுதியளவில், காவல் படையின் முறைகளுக்கும், செயற்பாடுகளுக்குமான விளக்கமொன்றையும் நாட்டில் உள்ள பரந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலை வழங்குகின்றது.

முற்றிலுமாக சமூகத்தின் மீது வலியுறுத்தப்பட்ட ஈடுபடுத்தல் தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்பதால், உறுதியான தாக்கங்கள் உச்சப்படுத்தப்படுவதையும், மறுதலையானவை குறைந்தபட்சமாக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்காக சிறிதளவு சிந்தனை செய்யப்படுவது அவசியமாகும். மதிப்பீடு பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- உக்கிரமான மோதலில் அதிகரிப்புக்கு வழங்கக்கூடிய (மாறும் முறையிலான சமூகங்கள்), அல்லது வழங்கியுள்ள (மோதலுக்குப் பிந்திய சமூகங்களில்) கட்டமைப்பிலானதும், குறிப்பான நிகழ்வுக்கும், செயற் பாட்டாளர்களுக்குமானதுமான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகள்ளூ
- காவல் துறை தாபனத்திலேயே கட்டமைப்பினதும், ஈடுசெய்தலினதும், முறைகளினதும் மீது கொண்டிருந்த தாக்க மோதல்ளூ

[7] 'WLSA நாடுகளில் (பொட்ஸ்வானா, லெஸொகோ, மலாவி, மொஸாம்பிக, சுவஸிலாந்து, சாம்பியா மற்றும் சிம்பாப்பே) நீதியை அடைதலில் பால்நிலையிலான இயக்கவிசையின் மேலோட்டம்" சரா முவுடுடுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை, தென் ஆபிரிக்காவில் பெண்களும், சட்டமும் (WLSA), ஆராய்ச்சி, கல்வி நம்பிக்கை பொறுப்பு, "நீதியாக ஜனநாயகத்தை ஏற்படுத்துதல்" மீதான கருத்தரங்கு, லண்டன், ஜுன் 26 - 28, 2001

- இந்த பரந்த மோதல் காரணிகள் கவனத்தில் எடுக்கப்படுகின்ற வழிகள்

*1.2. குற்றப் போக்குகளின் பகுப்பாய்வு*

நாட்டின் குற்றப் பிரச்சினைகளும், அவற்றின் சமூக, மற்றும் பொருளாதார ஆகுசெலவுகளும் கிட்டுகின்ற தரவுகளின் வீச்செல்லையொன்றின் மீதான அடிப்படையில், தாபிக்கப்பட வேண்டும். ஏனைய மதிப்பீடுகளுடனும், பகுப்பாய்வுகளுடனும் இணைந்தும், அவற்றுக்கு எதிராகச் சரிபார்க்கப்பட்டும் குற்றத்தினதும், பாதுகாப்பின்மையினதும் மனவுணர்வுகளை இத் தகவல் அளவிடுவதுடன், அடிமட்ட காட்டியொன்றாக சேவையாற்ற முடியும். இதன் மூலம் குற்றம்/குற்றவியல் போக்குகளில் மாற்றங்கள் சீர்திருத்த காலத்தின் போது அளவிடப்பட முடியும்.

பண்பறிதல் மற்றும் அளவறிதல் காட்டிகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் குற்றப் புள்ளிவிபரங்கள் நிலவ மாட்டா என்பதுடன், அவை நிலவும் போது அனேகமாக நம்பகதன்மை யற்றவையாக விளங்கும். மேலும், காவல் துறைக்கு குற்றத்தை முறையிடுவதில் புள்ளிவிபரங்கள் சம்பந்தப்பட்டிருப்பதனால், குற்றத்தின் உண்மையான மட்டங்களின் செம்மையானதொரு பிரதிநிதித்துவத்தை ஆழமாகப் பிரிந்துள்ள சமூகங்களில் உள்ள பெரும்பான்மையானோர் செய்வதற்கு இஷ்டப் படாததினால் இவை அபூர்வமாகவே வெளிப்படுத்துகின்றன. எனவே, பொதுமக்களைப் பாதிக்கின்ற பிரச்சனைகளின் விரிவான உணர்வொன்றுடன் வருமுகமாக, பொதுசன மனவுணர்வு அளவீடுகள், ஊடக அறிக்கைகள் மற்றும் சம்பவ விவரணங்கள் போன்ற ஏனைய கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டும். குற்றப் போக்குகளின் பகுப்பாய்வு பின்வருவன வற்றை வழங்க வேண்டும்:

- குற்றத்தினதும், அவற்றின் மூலங்களினதும் பாரிய பிரச்சனைகள்ளூ
- பிராந்திய, கிராமிய மற்றும் நகர திட்டமானவைகளினுள் சீர்குலைவுளூ
- சமூகத்தின் குறிப்பான குழுக்கள் (உதாரணம்: பெண்கள் அல்லது குறிப்பான சமய அல்லது இனத்துவக் குழுக்கள்) தொடர்பில் குறிப்பிட்ட ஒரு மதிப்பீடுளூ
- பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்துப் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதில், காவல் துறையினதும், வேறு கட்டமைப்பினதும் (உதாரணம் பாரம்பரியமான நீதிக் கட்டமைப்பு, நீதித்துறை) வகிபங்குளூ
- பிரச்சனைகள் வெறுமனே குற்றம் தொடர்பிலானதாக, வெறுமனே மோதல் தொடர்பிலானதாக அல்லது கலப்பிலானதாக இருந்தாலும் அவற்றின் மூலகாரணம்ளூ
- குற்றத்தின் பொருளாதார மற்றும் சமூக ஆகுசெலவுகளின் மதிப்பீடு.

*1.3. காவல் துறைத் தாபனத்தின் மதிப்பீடு*

காவல் துறையின் இன்னும் உள்ள தாபனரீதியான பலங்களையும், பலவீனங்களையும் தாபிப்பதும், மாற்றத்தை உட்கிரகிப்பதும் காவல் துறையின் ஆற்றலளவை மதிப்பிடுவதும் முக்கியமானதாகும். தாமாகவே காவல் துறை ஆளணி யினரினதும் (தாபனத்தின் சகல மட்டங்களிலும்), தமது தாபனத்தினதும், தமது முகாமைத்துவத்தினதும், மற்றும் தமது வகிபங்கினதும் தொடர்பில் தமது மனவுணர்வுகளின் அளவீடொன்றை இந்த அளவீட்டின் பகுதி உள்ளடக்க முடியும். மதிப்பீடு:

- நடைமுறையிலான காவல் துறை சேவையின்/தாபனத்தின் கட்டமைப்புக்களையும், மூலவளங்களையும், கடப்பாடு களையும் மற்றும் ஆற்றலளவையும், அரசியல் நிறுவனங்களுடன் அதன் உறவுகளையும் திட்டமிட வேண்டும்:
- காவல் துறை தாபனத்தினுள் முறைமையானதும், முறை சாராததுமான கலாசாரங்களையும், போக்குகளையும் மதிப்பிடுதல்,
- காவல் துறையின் நிதிசார் மூலவளங்களையும், அவை எவ்வாறு நிருவகிக்கப்படுகின்றன என்பதையும் மதிப்பாய்தல்ளூ
- மோசடியின் மட்டத்தையும், அதற்கான காரணங்களையும் கரிசனைக்கு எடுத்தல்ளூ
- காவல் துறையின் உள்ளக தொடர்பாடல் முறைமையை மதிப்பிடுதல்

*1.4. ஒழுங்கை நிலைநிறுத்துதலின் மனவுணர்வுகளின் அடிமட்ட அளவீடு*

முக்கியமான பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து பிரச்சனை களையிட்டு அவர்களது மனவுணர்வுகள் என்ன என்பதையும், இவற்றைக் கவனத்தில் எடுப்பதற்கு காவல் துறையினால் என்ன செய்ய முடியும், எதைச் செய்ய வேண்டும் என்பதையும் நிர்ணயிப்பதற்கு காவல் துறையினரிடமும், பொது மக்களிடமும் ஆதரவு தேடப்பட வேண்டும். மனவுணர்வுகளின் அளவீடு பின்வருவனவற்றை அளவிட வேண்டும்:

- நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்துதலில் உள்ள பிரச்சனை கள் (உதாரணம் மோசடி, ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றத்தில் சம்பந்தம், பொது மக்களிடையே நம்பிக்கையீனம், காவல் துறைக்கும், இராணுவத்திற்கும் இடையில் வகிபங்குகளில் வரையறுக்கப்படாத பிளவு)ளூ
- காவல் துறையினால் சமூகத்தின் சகல உறுப்பினர்களும் கருதப்படுதல்ளூ
- காவல் துறையின் முன்னுணர்விலான முன்னுரிமைகள்ளூ
- காவல் துறையின் முன்னுணர்வுகளில் பொதுமக்களின் மனவுணர்வுளூ
- காவல் துறையையிட்டு பொது மக்களின் எதிர்பார்ப்புக்கள்ளூ
- காவல் துறைக்கும், பொது மக்களுக்கும் இடையிலான உறவின்தன்மை.

*1.5. சட்ட மற்றும் அரசியலமைப்பு வரைத்திட்டத்தை மதிப்பாய்தல்*

காவல் துறை செயற்படுகின்ற சட்ட, அரசியலமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் வரைத்திட்டம் மதிப்பாயப்பட வேண்டும். சீர்திருத்த நடைமுறையை இயலத்தக்கதொரு சட்ட மற்றும் அரசியலமைப்பு வரைத்திட்டம் வசதிப்படுத்தும், சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலைப் பொறுப்

பேற்பதை ஆதரவளிப்பதற்கு என்ன துணை அரசியலமைப்பு மற்றும் சட்ட சீர்திருத்தம் அவசியமாக விளங்கும் என்பதை மதிப்பிடுவதற்கு மதிப்பாய்வு உதவும்.

- காவல் துறை நடத்தையை சட்டபூர்வமாக ஆட்சிப்படுத்தும் சம்பந்தப்பட்ட சட்டங்கள், சட்டக் கோவைகள் மற்றும் நியதிகள்
- ஒழுங்கை நிலைநிறுத்துதல், பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ஆகியன தொடர்பான பிராந்திய, அல்லது சர்வதேச வரைத்திட்டங்கள் மற்றும் சமவாயங்கள் (உதாரணம்: மனித உரிமைகள் சமவாயங்கள்)ளூ
- காவல் துறையின் வகிபங்கின் அரசியலமைப்பு வரைவிலக்கணம்ளூ
- சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலைப் பொறுப்பேற்பதற்கு அவசியமான சட்ட மாற்றங்கள்.

*1.6. காவல் துறைக்கும், பரந்த குற்றவியல் நீதிக்கும் மற்றும் பந்தோபஸ்து துறைகளுக்கும் இடையிலான உறவின் மதிப்பாய்வு*

காவல் துறையே பந்தோபஸ்து துறையின் மிகவும் கண்கூடான நிறுவனம் என்பதுடன், குற்றவியல் நீதிமுறைமையின் மைய அம்சமொன்றுமாகும். எனவே, இவ்வகிபங்கினையும், பின்வருவனவற்றை மதிப்பாய்வதன் மூலம் இத்துறையின் காவல் துறைக்கும், வேறு நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் அங்கீகரிப்பது முக்கியமானதாகும்:

- நீதிமன்றங்கள் மற்றும் தண்டத்துக்குரிய முறைமை ஆகிய பரந்த குற்றவியல் நீதித்துறையின் நிலையும், காவல் துறையுடன் அதன் உறவும்ளூ
- காவல் துறைக்கும், உதாரணமாக இராணுவப் புலனாய்வுச் சேவைகள் ஆகிய வேறு பந்தோபஸ்து துறை நிறுவனங்களுக்கும் இடையிலான உறவுளூ
- சனசமூக-அடிப்படையிலான காவல் துறைச் சீர்திருத்தத்தை முழுமைப்படுத்துவதற்கு ஈடுபடுத்துவதற்கு அவசியமான பரந்த குற்றவியல் நீதி முறைமை அத்துடன்/அல்லது பந்தோபஸ்து முறைமைகளினுள் காவல் துறைக்கும், வேறு துறைகளுக்கும் இடையிலான உறவு

*1.7. பாதுகாப்பு, மற்றும் பந்தோபஸ்து தொடர்பில் நடைமுறையிலான சமூக மற்றும் ஆட்சிக் கட்டமைப்புக்களை மதிப்பாய்தல்*

பொதுசனப் பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும் கையாள் வதற்கு பெருமளவு சமூகங்களில் பலமான முறைசாரா பொறிநுட்பங்கள் நிலவுகின்றன. இத்தகைய சமூகங்களில், உத்தியோகபூர்வ காவல் துறைக் கட்டமைப்புகள் பொது மக்களிடமிருந்து பெரிதும் விலகியேயுள்ளன. புத்தம் புதிய கட்டமைப்புக்களை உருவாக்குவதை விட, காவல் துறைக்கும், சனசமூகத்திற்கும் இடையில் பராமரித்தலின் வழிவகைகளின் ஒன்றான நடைமுறையிலான கட்டமைப்புக்களைப் பயன் படுத்துதல், அல்லது மீள்வீரியமூட்டுதல் அனேகமாக விரும்பத் தக்கது என்பதுடன், மிகவும் நிலைத்திருக்கத்தக்கதுமாகும். இந்த பொறிநுட்பங்கள் என்ன என்பதைப் புரிந்து கொள்வதும், பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் உறுதியானதும், மறுதலை யானதுமான சட்டபூர்வதன்மையில் அவற்றின் மட்டங்களையும், அவற்றின் பங்களிப்புகளையும் தீர்மானிப்பதும் முக்கிய மானதாகும். திட்டமிடும் நடைமுறை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- பொதுசன பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும், மோதல் தீர்மானத்தையும் கையாள்வதற்கு முயலுகின்ற கட்டமைப்புகள் (சட்டபூர்வமானதும், பிரச்சினை யிலானதுமான கட்டமைப்புகள் உட்பட. உதாரணம்: கிராமத்தின் வயது வந்தவர்கள்ளூ விழிப்புக் குழுக்கள்ளூ அயல்புற காவல்புறங்கள்ளூ தனியார் பந்தோபஸ்து நிறுவனங்கள், இத்தியாதி)ளூ
- நாட்டின் சட்ட வரைச்சட்டத்தினுள் முறைசாராப் பொறிமுறைகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ள மட்டம், அவற்றின் சட்டபூர்வதன்மை/ஆதரவு மற்றும் செல்வாக்கு/ தாக்கத்தின் மட்டம்ளூ
- பொது சனப் பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் (அதாவது, காவல் துறை, நீதி முறைமை, இத்தியாதி) முறைசாராததும், முறைமையானதும், அரசாங்க நிதிப்படுத்தலிலானதுமான கட்டமைப்புகளுக்கு இடையில் ஒப்பந்தத்தின்/ ஒத்துழைப்பின் அளவுளூ
- சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் பரந்த திட்டமொன்றுக்குள் பொருத்தமான நடைமுறை யிலான கட்டமைப்புகளை ஒன்றிணைப்பதன் வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள்.

*1.8. பங்குடமையாளர் மற்றும் தலைமைத்துவப் பகுப்பாய்வு*

ஏதாவது சீர்திருத்த நடைமுறையை நிலைத்திருக்கச் செய்வதற்காக, உள்ளூர் பங்குதாரர்களினதும், தலைவர்களினதும் சம்பந்தமும், உருப்படியான ஆதரவும் முக்கியமானவையாகும். பின்வருவன உட்பட காவல் துறை, அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம் (தேசிய, பிராந்திய, மாவட்ட, நகர, இத்தியாதி) ஆகியவற்றினுள் யார் முக்கிய புள்ளிகள் என்பதையிட்டு தெளிவான அறிவினைச் சீர்திருத்தச் செயற்பாட்டாளர்கள் கொண்டிருக்க வேண்டும்:

- சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதலை பொறுப்பேற்பதில் பங்குதாரர்கள் (காவல் துறை, சனசமூகக் கட்டமைப்புகள், அதன் பரந்த அமைப்பில் சிவில் சமூகம், பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை, அரசாங்கம், இத்தியாதி)ளூ
- சீர்திருத்தத்திற்கு சார்பாகவுள்ள முக்கிய பங்குதாரர்கள் (மாற்று முகவர்கள்)
- சீர்திருத்தத்தை எதிர்க்கின்ற முக்கிய பங்குதாரர்கள் (வீணடிப்போர்) மற்றும் சபைக்கு அவர்கள் எவ்வாறு கொண்டு வரப்படலாம்.

*1.9. நிதிசார் மதிப்பீடும், சாத்தியவளமும்*

நிதிசார்ரீதியில் நிலைத்திருக்க முடியாத சீர்திருத்த திட்டமொன்றை வடிவமைப்பதற்கு அது யாருக்கும் சேவை யாற்றமாட்டாது. எனவே, மூலவள ஒதுக்கீட்டினதும், வரவு-

செலவுத் திட்டமிடலினதும் மீது உண்மைநிலையிலான தீர்மானங்களை அறிவிப்பதற்கு, நிதிசார் தேவைகளின் செம்மையானதொரு மதிப்பீடும், உள்ளூராட்சி மன்றத்தினதும், காவல் துறைத் தாபனத்தின் உறிஞ்சல் ஆற்றலளவும் முக்கியமானவையாகும். நீண்ட காலத்திற்கு நிருவகிப்பதற்கு, அல்லது நிலைத்திருக்க வைப்பதற்கு ஆற்றலளவைக் கொண்டிருக்காத அரசாங்கமும், காவல் துறையும் மூலவளங்களுடன் அவற்றை வெற்றிகொள்ள முடியாத வகையில், ஏற்கனவே நிலவுகின்ற தேசிய மூலவளங்களின் செயற்றிறனானதும், சக்திமிக்கதும் மற்றும் சிக்கனமானதுமான உபயோகத்திற்கு ஊக்கமளிக்க வேண்டும். நிதிசார் மதிப்பீட்டின் முக்கிய விடயதானங்கள் பின்வருவன வற்றை உள்ளடக்க வேண்டும்:

- சர்வதேச நிதிசார் உதவியின் மட்டம்ளூ
- விருந்தோம்பல் அரசாங்கத்தினதும், காவல் துறை படையினதும் நடைமுறையிலான உறிஞ்சற் ஆற்றலளவுளூ
- மூலவளங்களின் உபயோகத்தின் முன்னுரிமைகள்ளூ
- சர்வதேச மூலவளங்களுடன் சேர்த்து ஒன்றுதிரட்டக்கூடிய உள்ளூர் மூலவளங்கள்ளூ
- சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதலில் சீர்திருத்தத்தைப் பொறுப்பேற்பதற்கு அவசியமான மேலதிக நிதிசார் மூலவளங்கள்

**கட்டம் 2: திட்ட வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்**

திட்ட மூலோபாயங்களையும், முன்னுரிமைகளையும் வகுத்த மைப்பதற்கு முன்னைய மதிப்பீடுகளினதும், பகுப்பாய்வினதும் மீது திட்டமிடல் மற்றும் வடிவமைப்புக் கட்டமைப்பு கட்டப்பட வேண்டும். முன்னைய கட்டத்தில் பிரதிபலித்த உள்ளூர் அதிகாரசபைகளுடன் ஆலோசனையிலான அணுகுமுறையை கட்டம் 2 தொடர வேண்டும் திட்டத்தின் அச்சொட்டான தன்மையினதும், ஒவ்வொன்றின் வகிபங்குகளினதும், பொறுப்புக்களினதும் மீது தெளிவான உடன்படிக்கையொன்றை நன்கொடையாளர்களும்/சர்வதேச செயற்பாட்டாளர்களும், அரசாங்கமும் அடைய வேண்டும். சமஅளவில், தேவைப்பட்ட வாறு சம்பந்தத்திற்கு அதை அனுசரிப்பது பற்றி வளைந்து கொடுக்கக்கூடியதாக தொடர்ந்தும் இருக்கும் அதே வேளை, சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் குணவியல்புகளினதும், தத்துவங்களினதும் மீது சம்பந்தப் பட்டுள்ள சகலரும் தெளிவாக இருப்பது அவசியமானதாகும். திட்டமிடல் கட்டத்தின் போது, அதிகார மட்டத்தில் உள்ள உயர்வான உறுப்பினர்கள் மட்டுமன்றி, நடுத்தர மற்றும் குறைந்த தரங்களிலான காவல் துறை ஆளணியினர்களும் உள்ளடக்கப்பட வேண்டும். அவர்களே சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதில் முக்கியமாகச் சம்பந்தப்பட்டிருப்பார்கள். காவல் துறைக்கும், பொது மக்களுக்கும் இடையில் ஒருவருடன் ஒருவர் இணைந்து செயற்படுவதனால் சாதிக்கக்கூடிய மட்டத்தையும், மாற்றத்தை எடுத்துக் கொள்வதற்கும், அமுல்படுத்துவதற்குமான அவர்களின் திறமையையும் பற்றி உண்மைநிலையிலானதாக இருப்பது முக்கியமாகும்.

திட்டமிடல் கட்டத்திற்கு ஐந்து அம்சங்கள் இருக்க வேண்டும்.

*2.1. ஈடுபடுத்தலின் முன்னுரிமைகளை வரையறுத்தல்*

ஈடுபடுத்தலின் முன்னுரிமைகளின் வரைவிலக்கணம் பின்வரு வனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- மதிப்பீட்டு மற்றும் பகுப்பாய்வுக் கட்டத்தில் இருந்து தோன்றியுள்ள முக்கியமான பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து சவால்கள்ளூ
- ஒரு குறிப்பிட்ட பிராந்தியம், அல்லது சமூகக் குழு தொடர்பில் குறிப்பான பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து பிரச்சினைகள் போன்ற நோக்கின் குறிப்பிட்ட துறைகள்ளூ
- சனசமூகங்கள்/அரசாங்கம் மற்றும் காவல் துறை ஆகியவற்றினால் வரையறுக்கப்பட்டவாறு ஒழுங்கை நிலைநிறுத்துதல் முன்னுரிமைகள்

*2.2. தலையீட்டின் நோக்கங்களை முன்வைத்தல்*

முன்னுரிமைகள் அடையாளங் காணப்பட்டவுடன், தலையீட்டின் குறிப்பான நோக்கங்கள் வகுத்தமைக்கப்படுவது அவசியமானதாகும். இவை உண்மை நிலையிலானதாகவும், குறிப்பானதாகவும் விளங்க வேண்டும்: என்ன செய்யப்பட முடியும், என்ன நேர மட்டத்தினுள், யாரால், மற்றும் என்ன மூலவளங்களுடன்.

பின்வரும் வலியுறுத்தப்பட்ட மாற்றங்களை நோக்கங்கள் உள்ளடக்க வேண்டும்:

- ஒழுங்கை நிலைநாட்டுதல் முறையும், செயற்றிறனும்ளூ
- சனசமூகங்களின் வகிபங்கும், சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலில் பங்கெடுப்பதற்கான அவற்றின் ஆற்றலளவும்ளூ
- காவல் துறைத் தாபனத்தின் கட்டமைப்பு
- காவல் துறைக்கும், மக்களுக்கும் இடையிலான உறவுளூ
- காவல் துறை பொறுப்புக் காட்டுதல்ளூ
- காவல் துறைக்கும், பரந்த குற்றவியல் நீதி முறைமைக்கும் இடையிலான உறவுகள்.

*2.3. நிதிசார்ரீதியில் திறமையான செயல்திட்டங்களைக் கொண்டிருத்தல்*

குறிப்பான செயற்பாடுகளினுள் முன்னுரிமைகளையும், நோக்கங்களையும் மாற்றஞ் செய்தல், இச் செயற்பாடுகளை வரிசைப்படுத்துதல் மற்றும் குறிப்பான செயற்பாட்டாளர்களுக்கு குறிப்பான பணிகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்புக் களைக் குறித்தொதுக்குதல் ஆகியனவற்றை செயல்திட்டங்கள் உத்தேசமாகக் கொண்டுள்ளன. போதியளவு மூலவளங்கள் இருப்பதுடன், செயற்றிறனாக நிருவகிக்கப்பட்டால் மட்டுமே நோக்கங்களும், செயல்திட்டங்களும் அமுல்படுத்தப்பட முடியும். செயல்திட்டமும், வரவு-செலவுத் திட்டமும் பின்வருவனவற்றை உள்ளடக்குவது அவசியமானதாகும்:

- நோக்கங்கள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவதற்கு பொறுப்பேற்கப்படவுள்ள குறிப்பான நடவடிக்கைகள்ளூ

- ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் பொறுப்பான குறிப்பான மக்களின் பெயர்கள்;
- ஆகுசெலவுகளும், மனித மூலவளங்கள் தேவைகளும்;
- நேரகாலத்தன்மை;
- நிதிப்படுத்தலின் மூலங்கள் (சர்வதேச மற்றும் உள்ளூர் மூலவளங்கள்)
- முகாமைத்துவப் பொறுப்பும், வரவு-செலவுத் திட்டத்திற்கு மேற்பார்வைக் கட்டமைப்புகளும்

*2.4. கண்காணித்தலுக்கும், மதிப்பாய்தலுக்கும் அடிமட்டங்களை/ அத்துடன்/அல்லது காட்டிகளை முன்வைத்தல்*

அமுலாக்கத்தைக் கண்காணிப்பதற்கு அடிமட்டங்கள் அத்துடன் /அல்லது காட்டிகள் விருத்தி செய்யப்பட வேண்டும். அவை உண்மைநிலையிலானதாகவும், எளியதாகவும், மிகக் குறைந்தளவு செலவினதாகவும் விளங்குவதுடன், உருவாக்கப்படவுள்ள மேற்பார்வை பொறிமுறைகளினாலும், கட்டமைப்புக்களினாலும் அவை பயன்படுத்தப்பட வேண்டியது முக்கியமாகும். நடுத் தவணை மதிப்பாய்வுகளும், கண்காணித்தல் நடைமுறைகளும் அவை அமுல்படுத்தப்படும் போது சீர்திருத்தத்தின் மீளாய்வை இயலச் செய்வதற்காக முழுமையான கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல் நடைமுறையினுள் கட்டியெழுப்பப்பட வேண்டும். காட்டிகள் பின்வருவனவற்றை அடக்கியிருக்க வேண்டும்:

- முன்னேற்றத்தை அளவிடுவதற்கு பண்பறிதலினதும், அளவறிதலினதும் காட்டிகளின் சமநிலையிலான கூடைகளின் ஒரு சோதனைப் பட்டியல்;
- ஒருவர் அளவிடுவதற்கு விரும்புகின்ற மாற்றங்களுக்கான கூருணர்விலான காட்டிகள்;
- வறுமையில் வாழும் மக்களுடையது போன்ற ஒப்புநோக்கில் அதிகாரமற்ற குழுக்களின் அனுபவங்களின் கண்காணித்தலைச் சரிப்படுத்தும் காட்டிகள்;
- வறுமையில் வாழும் மக்களுடையது போன்ற ஒப்புநோக்கில் அதிகாரமற்ற குழுக்களின் அனுபவங்களின் கண்காணித்தலைச் சரிப்படுத்தும் காட்டிகள்.

*2.5. மோதல் தீர்மானப் பொறிமுறைகளை உருவாக்குதல்*

தாம் பணியாற்றுகின்ற சனசமூகங்களுடனான தோழமையுடன், பிணக்குகளை அல்லது மோதல்களைத் தீர்ப்பதற்கு காவல் துறையினர் இயலக்கூடியவர்களாக இருப்பதே சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் முக்கியமான தொரு கொள்கையாகும். மேலதிகமாக, பொருத்தமானவாறு, வேறுபட்ட சனசமூகங்களினுள் பிணக்குகளின் அல்லது மோதல்களின் அமைதியான தீர்மானத்தைக் கையாளுகின்ற நடைமுறையிலான கட்டமைப்புக்களுடன் அவை கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும். எனினும், காவல் துறையை நோக்கி சனசமூகங்களில் உள்ள நம்பிக்கையின் மட்டத்தையும், இந்த நம்பிக்கையை உருவாக்குவதற்கு அது எடுக்கும் நேரத்தையும் பற்றி சீர்திருத்த செயற்பாட்டாளர்கள் உண்மைநிலையிலானதாக விளங்க வேண்டும். எனவே மோதல்/பிணக்கு பொறிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- தாம் பணியாற்றுகின்ற சனசமூகங்களுடன் கூட்டு முயற்சியிலான பிரச்சனை தீர்க்கும் மற்றும் பிணக்கு/ மோதல் தீர்மானத்தை நடத்துவதற்கு காவல் துறையை இயலச் செய்கின்ற பொறிமுறைகள், அல்லது கட்டமைப்புகள்;
- இப்பொறிமுறைகளுக்கும், பாரம்பரியமான மோதல் தீர்மான அரங்குகள் போன்ற வேறு பொருத்தமான கட்டமைப்புக் களுக்கும் இடையிலான தொடர்புகள்;
- மாற்றத்தைக் கொண்டு வருவதில் இப் பொறிமுறைகளின் செயற்றிறன்களையும், சனசமூகத்தில் சமாதானத்தினதும், பந்தோபஸ்தினதும் மீது அவற்றின் உண்மையானதும், மனவுணர்விலானதுமான தாக்கத்தையும் மதிப்பாய்தல்;

**கட்டம் 3: அமுலாக்கத்தை நிருவகித்தல்**

அமுலாக்கத்தின் போது, முன்னேற்றத்தைக் கவனமாக கண்காணிப்பதும், நடைமுறையிலான மேற்பார்வையை உறுதிப்படுத்துவதும், இறுதியான குறிக்கோள்கள் மீது தெளிவாக தொடர்ந்திருப்பதும் முக்கியமானதாகும். நடைமுறையில் சகல பங்குதாரர்களின் சம்பந்தத்தை பலப்படுத்துவதையும், பரந்ததாக்குவதையும் அமுலாக்கம் நாட வேண்டும். அமுலாக்கல் கட்டத்திற்கான முக்கியமான அம்சங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்க முடியும்:

*3.1. முன்னோடி நடவடிக்கைகள்*

முன்னோடி நடவடிக்கைகள், அல்லது திட்டங்கள் மிகவும் பயனுள்ளவையாகும். ஆனால், அவை உண்மை நிலை யிலானதாகவும், வேறு எங்கினும் பிரதியீடு செய்யக் கூடியதாகவும் விளங்க வேண்டும். முன்னோடித் துறைகள், அல்லது கருத்திட்டங்கள் அணுகுமுறைகளைச் சோதிப்பதற்கும் அவசியப்படுமிடத்து மீள்சீராக்குவதற்கும், வெற்றியீட்டினால் சீர்திருத்த நடைமுறையைப் பாரியளவில் மேம்படுத்துவதற்கும் வாய்ப்பினை வழங்குகின்றது.

*3.2. தேசிய மற்றும் உள்ளூர் மேற்பார்வையும், மதிப்பாய்வுக் கட்டமைப்புகளும்*

சீர்திருத்தத்தின் அமுலாக்கத்தினை வழிநடத்துவதற்காகவும், மூலவளங்களின் உபயோகத்தினைக் கண்காணிப்பதற்காகவும் தேசிய மற்றும் உள்ளூர் மேற்பார்வைக் கட்டமைப்புகள் தாபிக்கப்பட வேண்டும். நடைமுறையிலான கட்டமைப்புகள் அடையாளங் காணப்படுமிடத்து, இவை மதிப்பாயப்பட்டு, பொருத்தமானவாறு பயன்படுத்தப்பட வேண்டும். இந்த மேற்பார்வைக் கட்டமைப்புகள் தாபிக்கப்பட வேண்டும். நடைமுறையிலான கட்டமைப்புகள் அடையாளங் காணப்படு மிடத்து, இவை மதிப்பாயப்பட்டு, பொருத்தமானவாறு பயன் படுத்தப்பட வேண்டும். இந்த மேற்பார்வைக் கட்டமைப்புக்கள் பின்வரும் பொறிமுறைகளை உள்ளடக்க வேண்டும்:

- பிரச்சனைகளை உண்மையாகவும், வெறுமனே அடையாள சக்தியுடனும், அதிகாரத்துடனும் இன்றியும் கவனத்திற்கெடுத்தல்;
- தெளிவான வகிபங்குகளுடனும், பொறுப்புக்களின் பங்கிடுதலுடனும்;

- மேற்பார்வை நடவடிக்கைகளை நடத்துவதில் சிவிலியன் பங்கெடுப்புடன்.

*3.3. பொறுப்புக்காட்டும் கட்டமைப்புகள்*

காவல் துறைக்கும், பொது மக்களுக்கும் இடையில் நம்பிக்கையிலான உறவைப் பேணுவதே சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பொறுப்புக் காட்டுதலை முன்னுரிமைப்படுத்துவதற்கு, அதாவது உள்ளூர் சனசமூகங்களின் நம்பிக்கையை வெற்றிகொள்வதற்கு அது சீவியத்தொழில்ரீதியானதும், சக்திமிக்கதுமான காவல் துறைச் சேவை மட்டும் அவசியமில்லை ஆனால், பொது மக்களுக்கு காவல் துறை தெளிவாகப் பொறுப்புக் காட்டுதல் அவசியமாகும். பொறுப்புக்காட்டும் கட்டமைப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- அரசாங்கத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் காவல் துறையை பொறுப்புக் காட்ட வைக்கும் கட்டமைப்புகள்ளு
- பொதுமக்களுடன் நேரடியான தொடர்பாடல் பொறிமுறைகள் (உதாரணம்: ஹொட்லைன்கள், அனாமதேய முறைப்பாடுகள் சேவை)ளு
- முறைப்பாடுகள் நடைமுறைகளுக்கும், பொறிமுறைகளுக்கும் இலகுவான பொதுமக்கள் அடைதல்ளு
- உள்ளக மதிப்பாய்வுச் சபைகள்ளு
- பொறுப்புக் காட்டுதலை நிறைவேற்றுவதில் தமது வகிபங்கு மீது சட்டமியற்றுபவர்களுக்கான கல்வித் திட்டங்கள் (உதாரணம்: பாராளுமன்ற குழுக் கட்டமைப்புகள், மாகாண/மாவட்டக் கட்டமைப்புகள்).

*3.4. காவல் துறையின் பயிற்சியும், மேம்பாடும் மற்றும் சனசமூக ஆற்றலளவும்*

சீர்திருத்த நடைமுறையை நிலைத்திருக்கச் செய்வதற்காக, சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதைப் பொறுப்பேற்பதற்காக (அத்துடன் நிலைத்திருக்க வைப்பதற்காக) உள்ளூர் சனசமூகங்களினதும், காவல் துறையினதும் ஆற்றலளவு பலப்படுத்தப்பட வேண்டும். இந்த இலக்கை நோக்கி, காவல் துறைக்கும், சனசமூகத்திற்கும் உள்ளூர் பயிற்சி நிறுவனங்களின் ஆற்றலளவை விருத்தி செய்வதும், பயனுள்ள திறன்களை ஏற்கனவே கொண்டுள்ள இரு குழுக்களினுள் தனிப்பட்டவர்களை அடையாளம் காண்பதும் முக்கியமானதாகும்.

காவல் துறையினுள் பின்வருவன முக்கியமானவையாகும்:

- சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதில் நடைமுறையிலான கல்விக் கட்டமைப்புக்களினதும், திட்டங்களினதும் ஊடாக பயிற்றுவித்தல்ளு
- பயிற்சி நெறிகளின் பின்னர் பின்தொடர் பயிற்சியை வழங்குதல்ளு
- மனித உரிமைகளுக்கு மரியாதையளிப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும் காவல் துறையின் ஆற்றலளவைப் பலப்படுத்துதல்ளு
- பொருத்தமானதாகவும், செயற்திறனாகவும் தகவலைத் திரட்டுவதற்கும், நிருவகிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் காவல் துறையின் ஆற்றலளவை மேம்படுத்துதல்ளு
- களப் பயிற்சிக்கு சிரேஷ்ட தேசிய அத்துடன்/அல்லது சர்வதேசக் காவல் துறை உத்தியோகத்தர்களை பயன் படுத்துவதன் மூலம் ஆலோசனை வழங்குதல்.

சிவில் சமூகம்/சனசமூகத்தினுள் பின்வருவன முக்கியமானவையாகும்:

- சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ஆகியன தொடர்பில் பொது மக்களின் வகிபங்கு மற்றும் பொறுப்புக்கள் ஆகியன பற்றிய விழிப்பியலை உயர்த்துதல்ளு
- அவசியப்பட்டால், அடிப்படை ஒழுங்கமைப்பு திறன்களில் பயிற்றுவித்தல்.

*3.5. மாற்றுத் திட்டத்தை வழிகாட்டுவதற்கும், நிருவகிப்பதற்குமான பலமான உள்ளூர் ஆற்றலளவு*

மாற்று நடைமுறையை அமுல்படுத்துவதிலும், வழிகாட்டுவதிலும், மற்றும் நிருவகிப்பதிலும் விருந்தோம்பல் நாட்டு பங்குடமையாளர்களுக்கு (காவல் துறை, அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம்) ஆற்றலளவைக் கட்டியெழுப்புவதன் மூலம் சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலில் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலை முழுமைப்படுத்த வேண்டும். இது சீர்திருத்தத் திட்டத்தின் அமுலாக்கம் முழுவதும் நடந்து கொண்டிருக்கும் ஒரு நடைமுறை என்பதுடன், இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- மாற்றுத்திட்டத்தை வடிவமைப்பதற்கும், அமுலாக்குவதற்கும் விருந்தோம்பல் நாட்டுக் காவல் படையினதும், சனசமூகங்களினதும் திறன்களைப் பலப்படுத்துதல்ளு
- தேவைப்பட்டவாறு மாற்றுத்திட்டத்தை மீள் வடிவமைப்பதிலும், அனுசரிப்பதிலும் சம்பந்தப்பட்ட பங்குடமையாளர்களுக்கு ஆதரவளித்தல்ளு
- அனுபவங்களையும், அறிவையும் பங்கிடுமுகமாக, வெளியார்/சர்வதேச உசாவலர்களுடன் சேர்ந்திருப்பதற்கு முக்கிய காவல் துறை ஆளணியினரைச் சம்பந்தப்படுத்துதல்ளு
- இந் நடைமுறையில் முக்கியமான பாகமொன்றை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல்

*3.6. சீர்திருத்த நடைமுறைக்கு போதியளவு மூலவளங்கள்*

சீர்திருத்த நடைமுறையை நிலைத்திருக்கச் செய்வதற்கு போதியளவு நிதிசார் மூலவளங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், வழமையான ஒழுங்கை நிலைநிறுத்துதல் வரவு-செலவுத் திட்டத்தினுள் அவசியமான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளினுள் இது மாற்றப்பட வேண்டும். சீர்திருத்த நடைமுறையின் நீளம் மாறுபடலாம்ளு அதற்கு ஆதரவளிக்கும் சர்வதேசச் செயற்பாட்டாளர்கள் சாத்தியமானளவு நீண்ட காலத்திற்கு நிதிப்படுத்தல் நிலைத்திருக்கும் தன்மையை

தாபிப்பதை அது குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். இதனால், சர்வதேச மூலவளங்களின் மீது சீர்திருத்த நடைமுறை தனித்து தங்கியிருக்க வேண்டியதில்லை என்பதுடன், ஏற்றுக்கொள்கின்ற நாட்டு மூலவளங்களின் உபயோகத்தை அதிகபட்சமாக்குவது அவசியமானதாகும். நிலைத்திருத்தல் சீர்திருத்த நடைமுறையொன்றுக்கான போதியளவு மூலவளங்களை உறுதிப்படுத்துவது பின்வரு வனவற்றைச் சம்பந்தப்படுத்துகின்றது:

- சர்வதேச மீளப் பெறுதலின் பின்னர் நடைமுறையின் நீண்ட கால நிலைத்திருத்தலுக்கான பொறிமுறைகள்ளூ
- உண்மையான தேவைகளினதும், முன்னுரிமைகளினதும் அடையாளம் காணல் மீதான அடிப்படையில் சர்வதேச தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைப்பு ஆதரவுளூ
- பலதரப்பட்ட மட்டங்கள் மீது சீர்திருத்த நடைமுறை தொடர்வதை உறுதிப்படுத்துமுகமாக சாத்தியமானளவு நிதிப்படுத்தலைப் பரவலாக்குதல்

### *3.7. பொருத்தமான ஒழுங்கமைப்பிலான கட்டமைப்பு*

ஒழுங்கை நிலைநிறுத்துதலின் வலியுறுத்தப்பட்ட பாணியின் அமுலாக்கத்திற்கான சாதகமான கட்டமைப்பினை காவல் துறை தாபனம் கொண்டிருப்பதனை சீர்திருத்த நடைமுறை உறுதிப்படுத்த வேண்டும். இக் குறிக்கோளைச் சாதிப்பதற்காக, பின்வருவனவற்றை பொருத்தமானதொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு உள்ளடக்க வேண்டும்:

- சனசமூகத்துடன் ஈடுபடுவதற்கு உள்ளூர் காவல் துறை ஆளணியினருக்கு அவசியமான அதிகாரம்ளூ
- தெளிவான வகிபங்கும், கடப்பாடும்
- தமது நாளாந்த பணியில் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதைப் பொறுப்பேற்பதற்கு காவல் துறை ஆளணியினரை ஊக்குவிப்பதற்கு வெகுமதிகளும், அங்கீகாரங்களும்ளூ
- முகாமைத்துவத் திறன்கள்

### *3.8. விரைவான வெற்றிகள்*

சீர்திருத்தம் எந்த திசையில் செல்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்ற சீர்திருத்த நடைமுறையில் முன்கூட்டிய உறுதியான மாற்றங்களை விரைவான வெற்றிகளின் கருத்துரு குறிப்பிடுகின்றது. விரைவான வெற்றிகள் வெற்றியை எடுத்துக் காட்டுகின்றன, வாங்கி சேமிப்பதை ஊக்குவிக்கின்றன. அத்துடன் மேலும் மாற்றங்களுக்கும், சீர்திருத்தங்களுக்கும் கட்டிடத் துண்டங்களை வழங்குகின்றன. சீர்திருத்த நடை முறையின் சகல பக்கங்களின் மீதும் மேலும் நம்பிக்கையை கட்டியெழுப்புதலை மேம்படுத்துவதற்கு உண்மையானதும் தெளிவானதுமான கண்கூடான மாற்றங்களுக்கு வழிகாட்டுவது விரைவான வெற்றிகளுக்கு அவசியமாகும். ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள சிரேஷ்ட காவல் துறை உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து, கூஷமாதிரி காவல் துறை நிலையங்கள்' மீது பணியை ஆரம்பிப்பது வரை இம் மாற்றங்கள் வேறுபடுகின்றன. ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதற்கான சனசமூக அடிப்படை யிலான அணுகுமுறையை நிலைநிறுத்துவதற்கான சனசமூக அடிப்படையிலான அணுகுமுறையொன்றைப் பிரயோகிப்பதன் மூலம் செப்பனிடப்படக்கூடிய உறுதியான தாக்கங்களை எடுத்துக்காட்டுவதற்கு அவர்களது தாபனம் உதவிசெய்ய முடியும். அவ்வாறாக முழு அளவில் அணுகுமுறைக்கான பரந்த ஆதரவுக்கு ஊக்கமளிக்கின்றது. மாதிரி நிலையங்களில் சோதிக்கப்பட்ட புது மாற்றங்கள் வேறு பகுதிகளில் உள்ள காவல் துறைக்கு பரப்புவது அவசியமானதாகும்.

### *3.9. கண்காணித்தலுக்கான பொறிமுறைகளும், நடைமுறை களும்*

வேறு எங்கினும் அடையாளங் காணப்பட்டுள்ள வேறு தேசிய முன்னுரிமைகளைக் கண்காணித்தல் பொறிமுறைகளும், நடைமுறைகளும் பொறுப்புக்கு எடுக்க வேண்டும் (உதாரணமாக, உலக வங்கி வறுமைக் குறைப்பு மூலோபாயங் களை கண்காணித்தலின் வரைச்சட்டத்தில்). நடைமுறை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- திட்டமிடல் கட்டத்தில் வரையறுக்கப்பட்ட அடிமட்டக் குறிகளும், காட்டிகளும்ளூ
- சிறந்ததும், மோசமானதுமான வழக்கங்களை அடையாளங் கண்டு, அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளினதும், மூலோபாயங்களினதும் ஒரு மதிப்பாய்வுளூ
- மாற்று நடைமுறைக்கு அதிக ஆதரவைத் தோற்று விப்பதற்காக சாதனைகளையும், வெற்றிகளையும் பிரச்சாரப்படுத்துவதற்கான பொறிமுறைகள்ளூ
- சம்பந்தத்தையும், ஈடுபடுத்தல் மீது அதன் தாக்கத்தையும், சம்பந்தத்தின் மீது ஈடுபடுத்தலின் தாக்கத்தையும் கண்காணிக்குமுகமாக ஆபத்து, மற்றும் மோதல் பகுப்பாய்வின் தொடர்ச்சியான புதுப்பித்தல்ளூ
- சர்வதேச சனசமூகத்தின் ஆதரவுடன் கண்காணித்தலைப் பராமரிப்பதில் உள்ளூர் சிவில் சமூக குழுக்களின் உரித்துரிமைளூ
- மாற்று நடைமுறைக்கு மேலும் ஆதரவைத் தோற்றுவிக்கு முகமாக சாதனைகளையும், வெற்றிகளையும் பிரச்சாரப் படுத்துதல்.

### *3.10. மோசடிக்கு எதிர்ப்பினைக் கட்டியெழுப்பும் திட்டங்கள்*

மோசடியினால் கறைபடாத காவல் துறையொன்று மாற்றத்தின் சக்திமிக்கதொரு அடையாளம் என்பதுடன், பொதுசன நம்பிக்கையில் பாரியதொரு கட்டிடத் துண்டமாகும். எனினும், மோசடிக்கு எதிர்ப்பினை பலப்படுத்துதல் அரசாங்கத்தினுள்ளும், காவல் துறையினுள்ளும் சீரிய அர்ப்பணிப்பொன்றை அவசியப்படுத்துகின்ற ஒரு கஷ்டமான நடைமுறையாகும். உண்மைநிலையிலானதாக சீர்திருத்தவாதிகள் இருப்பது முக்கியமானதாகும். பொருளாதார வாழ்தகவின் பரந்ததொரு சமூகப் பிரச்சனையாக மோசடி விளங்கலாம் அத்துடன்/ அல்லது குறிப்பிட்ட சமூகமொன்றில் தரமாக ஏற்றுக் கொள்ளப்படலாம். இதில் ஏதாவது காரணி காவல் துறையில் மட்டும் ஒழிப்பதற்கு மிக அதிகளவில் கஷ்டத்தை ஏற்படுத்தும். செயற்றிறனான மோசடிக்கு எதிரான மூலோபாயமொன்று பின்வருவனவற்றை அடக்க வேண்டும்:

- சிறந்த முகாமைத்துவம், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுளூ
- திடமான மோசடிக்கு எதிரானதொரு கொள்கைளூ
- நியாயமானதும், ஒளிவு மறைவற்றதுமான ஒழுக்காற்றுக் கொள்கைகளும், நடைமுறைகளும்ளூ
- மோசடிக்கு எதிரான அலகொன்றைச் செயற்றிறனாக தலைமை தாங்குவதற்கு அவசியமான தகுதியையும், தனிப்பட்ட திறமைகளையும் கொண்டுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான ஆதரவுளூ
- முறைப்பாடுகளின் பொறிமுறைகள்.

*3.11. உள்ளக மற்றும் வெளிவாரி தொடர்பாடல்*

அமுலாக்கல் நடைமுறை முழுவதும், ஒழுங்கை நிலை நிறுத்துவதை அதிக ஒளிவு மறைவற்றதாகவும், பொறுப்புக் காட்டக்கூடியதாகவும் ஆக்குமுகமாக, பொதுமக்களுடனான உள்ளகத் தொடர்பாடலும், வெளிவாரித் தொடர்பாடலும் பலப்படுத்தப்படுவது அவசியமாகும். காவல் துறையில் நம்பிக்கையைப் பேணுவதை நோக்கி ஏதோ வழியில் செயற்றிறனான வெளியிலான தொடர்பாடல் செய்ய முடியும். தவறுகைகள் மட்டுமே அறிவிக்கப்படும் என்ற அச்சத்தினால் ஊடகங்களைச் சம்பந்தப்படுத்த பொதுவான தயக்கமொன்று உள்ள போதிலும், காவல் துறையின் வெளியிலான தொடர்பாடல் மூலோபாயத்தில் மூலோபாயப் பங்காளியான பயன்படுத்தக்கூடிய ஊடகங்களுடன் காவல் துறை தீவிரமாக ஈடுபட வேண்டும். ஒழுங்கை நிலைநாட்டுதல் பிரச்சனைகள் மீது இதழியலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படும் அதே வேளை, காவல் துறையும் ஊடகப் பயிற்சியைப் பெற வேண்டும்.

**கட்டம் 4: மதிப்பாய்வும், பின்னடைவும்**

சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல் திட்டத்தின் முடிவான குறிக்கோள் நிலைத்திருக்கத்தக்க சீர்திருத்த நடைமுறையொன்றாகும். இது சர்வதேச சம்பந்தத்தின் பயிற்சிச் சக்கரங்கள் இன்றி முன்செல்ல முடியும். இதைச் சாதிப்பதற்காக, அமுல்படுத்தல் திட்டம் கவனமாகக் கட்டமைக்கப்பட வேண்டும். இதனால், உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்கு படிப்படியாக மேலும், மேலும் அதிகாரம் கையளிக்கப்பட முடிகின்ற அதே வேளை, சர்வதேச அமுலாக்கல் வகிபங்கு ஒத்திசைவான ரீதியில் குறைவடைகின்றது. இது சர்வதேசச் செயற்பாட்டாளர்கள் ஒன்றில் மிக விரைவிலேயே வெளியேறும் போது அல்லது பொறுப்பினை மிக மெதுவாக ஏற்கும் போது, பெருமளவு காவல் துறைச் சீர்திருத்த முன்னெடுப்புகளைக் காயப்படுத்தும் போக்கினைத் தவிர்ப்பதற்கு உதவும்.

அதன் மூலோபாயத்திலான குறிக்கோள்களையும், நோக்கங் களையும் திட்டம் சாதித்துள்ளதா என்பதை விரிவானதொரு மதிப்பாய்வு மதிப்பிட வேண்டும். ஈடுபடுத்தலுக்கு முந்திய அடையாளங் காணப்பட்ட பண்பறிதல் மற்றும் அளவறிதல் காட்டிகளும், அடிமட்டக் குற்றிகளும் திட்ட வடிவமைப்பினுள் கட்டப்பட்டு, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால விளைவு களினதும், முடிவுகளினதும் நடைமுறையிலான கண்காணித்தல் இருந்தால், எப்பொழுது பின்வாங்குவது பொருத்தமானது என்பதையிட்டு தெளிவான ஞானமொன்றை ஒருவர் கொண்டிருக்க வேண்டும். முழுவதுமாக உள்ளூர் மனவுணர்வு களின் முழுச் சம்பந்தமும், பயன்பாடும் மதிப்பாய்வின் முடிவுகளுக்கு அதிகளவு சட்டபூர்வதன்மையை வழங்குகின்றது, அத்துடன் பணியை முன்னெடுத்துச் செல்கின்ற உள்ளூர் பங்குதாரர்களுக்கான கற்கும் வாய்ப்பொன்றை வழங்குகின்றது. ஈடுபடுத்தல் நிதிசார்ரீதியாகக் கணக்காயப்படுவது முக்கியமானதாகும். இது காவல் துறையினுள்ளும், சர்வதேச ஆதரவிலிருந்தும் மூலவளங்களின் ஒதுக்கீட்டினை மதிப்பாய வேண்டும்.

மாற்றுத்திட்டத்தின் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான தாக்கம் மதிப்பிடப்பட வேண்டும். இது பாதுகாப்பு, பந்தோபஸ்து மற்றும் முன்னேற்றம் ஆகியன மீது சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் திட்டத்தின் தாக்கத்தையும், சனசமூகங்களில் மோதலின் முன்கூட்டிய நடைமுறையிலான ஆபத்துக்களினதும், மூலக் காரணி களினதும் மீதான சீர்திருத்தத்தின் தாக்கத்தையும் அளவிட வேண்டும்.

தமது சொந்தப் பெறுபேற்றிலிருந்து கண்காணித்தலின் நடைமுறையைப் பராமரிப்பதற்கும், தமது தவறு களிலிருந்து கற்பதற்கும் காவல் துறை இயலுமானதாக விளங்க வேண்டும். இதனால் இந் நடைமுறைகள் சர்வதேச ஆதரவு முடிவுகட்டப்படும் போது தொடரப்பட முடியும். அமுலாக்கல் கட்டத்தின் போது தாபிக்கப்பட்ட மேற்பார்வை யினதும், மதிப்பாய்வினதும் கட்டமைப்புகளின் ஆற்றலளவைப் பலப்படுத்துவது முக்கியமாகும்.

சர்வதேச பின்னடைவு முடிவானதல்ல. அதற்குப் பதிலாக சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்தலின் நடைமுறையானது பொருத்தமானதொரு தன்மையில் தொடர்வதை உறுதிப்படுத்துவதற்கு கிரமமான அவ்வப் பொழுதிலான மதிப்பாய்வுகளை அட்டவணைப்படுத்தலே முடிவானதாக இருக்க வேண்டும். தாம் ஆரம்பித்துள்ள சீர்திருத்த நடைமுறையை சர்வதேச செயற்பாட்டாளர்கள் கூமறந்துவிட்டார்கள்' என்ற மனவுணர்வை இது தவிர்க்கும். நடைமுறைக்கான தொடருகின்ற நன்கொடையாளர் ஆதரவை உறுதிப்படுத்தும் வழிவகைகளாக மதிப்பீடு முக்கியமானதாக இருக்கும்.

இறுதியாக, ஈடுபடுத்தலிலிருந்து கற்கப்பட்ட பாடங்கள் எதிர்கால ஈடுபடுத்தல்களின் வடிவமைப்பினை அறிவிப்பதற்கு பரப்பப்படுவது முக்கியமானதாகும். சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் திட்டத்தை மதிப்பாய்வதில் சகல பங்குடமையாளர்களையும் சம்பந்தப்படுத்தும் முழுமையான தொரு மதிப்பாய்வு நடைமுறை எது செயற்பட்டது, அத்துடன் எது செயற்படவில்லை என்பது பற்றிய முக்கியமான பாடங்களை விளைவிக்க முடியும். மேலும், நாட்டில் பின்தொடர் சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலை நிறுத்துதல் பணிக்குள்ளும், நடைமுறைக்கு ஆதரவளிக்கும் சர்வதேச செயற்பாட்டாளர் களின் வழக்கத்திலும் இத்தகைய பாடங்கள், அல்லது அனுபவங்கள் ஊட்டப்பட வேண்டும்.

## VII. முடிவுரை

சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்டுதல் பந்தோபஸ்தையும், அபிவிருத்தியையும் ஒட்ட வைப்பதாக விளங்க முடியும். சனசமூகத்தினால் ஆதரவளிக்கப்படுவதும், பாதுகாப்பின்மையை தடுத்து நிறுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டதுமான காவல் துறை அரசியல் அபிவிருத்தியை இயலச் செய்வதில் மிக முக்கியமான தாக்கமொன்றைக் கொண்டிருக்க முடியும். எனினும், இது வரை சர்வதேச முயற்சிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு காவல் துறை தாபனமொன்றை சீர்திருத்துதலும், அவர்களது மட்ட ரகத்திலான பொது மக்கள் முன்னாலுள்ள பிரதிமையை மீள் முனைப்படுத்துதலும், அவர்களது சேவை விநியோகத்தை மேம்படுத்தலும் பயமுறுத்துகின்ற அரசியல்ரீதியான நிதிசார் ரீதியான தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்புரீதியான வரலாற்றுரீதியான தடைகளுக்கு முகங்கொடுக்கின்றன. முகாமைத்துவம், தலைமைத்துவம், அரசியல் மனவுறுதி, குறித்துரைக்கப்பட்ட போக்குகள், தாபிக்கப்பட்ட நடத்தைகள் மற்றும் மறுதலையிலான பொதுசன மனவுணர்வுகள் ஆகியவற்றின் பிரச்சனைகளைக் கவனத்தில் எடுப்பதை இறுதியானதும், செயற்றிறனானதுமான சீர்திருத்தத்தை சாதித்தல் வேண்டுகின்றது. அதன் மிகவும் சிக்கல்தன்மை பயமுறுத்தலாக விளங்க முடியும். இருந்த போதிலும், அதன் மையத்தன்மை என்பதன் கருத்து என்னவெனில் அது தட்டிக்கழிக்க முடியாத பிரச்சனை ஒன்றேயாகும். நிறுவனமொன்றாக காவல் துறையையும், நன்கு புரிந்து கொள்ளப்பட்ட தத்துவத்தினதும், தெளிவான எண்ணத்திலான திட்டத்தினதும், அத்துடன் அமுலாக்கத்தின் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதும், நிருவகிக்கப்படுவதுமான நடைமுறையினதும் மீது சேவையையாற்றுவதற்கு சனசமூகங் களுடனான அவர்களது உறவையும் சீர்திருத்துவது மீது சமமான நோக்கினை வழங்குவதற்கு எவ்வாறு முயற்சிகள் கருத்தினைக் கொண்டுள்ளன என்பதைச் செயலமர்வு கீழ் கோடிட்டது.

காவல் துறைச் சீர்திருத்தம் எப்பொழுதுமே விசாலமடையும் செயற்பாட்டாளர்களினால் பொறுப்பேற்கப்படுவதால், அது எதைப் பராதீனம் செய்யாதிருக்கின்றது, அத்துடன் அது எவ்வாறு பொறுப்பேற்கப்பட வேண்டும் என்பதையிட்டு தெளிவான புரிந்துணர்வொன்று இருப்பது முக்கியமாகும். பரந்து கொள்கை வாதங்களினுள் சனசமூக அடிப்படையில் காவல் துறைச் சீர்திருத்தத்திற்கு இடமளிப்பதிலும், திட்டமிடுதலை அதன் அமுலாக்கத்தில் வழிகாட்டுவதிலும் இவ் வழிகாட்டி பயனுள்ளதாக விளங்கும் என நம்பிக்கை கொள்ளப்பட்டுள்ளது.

# சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்
# பந்தோபஸ்தை விருத்தி செய்தல் - அபிவிருத்தியை உறுதிசெய்தல்

## செயலமர்வு நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 9.00 - 9.30 | காலையுணவு |
| 9.30 - 9.45 | வரவேற்புரை<br>டேவிட் எம். மலோன், தலைவர், சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்<br>அதிமேதகு அலன் ரொக், ஐக்கிய நாடுகளுக்கான கனடாவின் நிரந்தர தூதுக் குழு |
| **அமர்வு I** | சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்: கீழ்கோடிடப்பட்டுள்ள கருத்துருக்களும், அமுலாக்கத்தின் சவால்களும் |
| 9.45 - 10.45 | அறிமுகமும், மேலோட்டமும்<br>கலாநிதி கோர்டன் பீக், இணையாளர், சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்<br><br>சமர்ப்பணம்: “சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் தத்துவமும், அடிப்படைக் கோட்பாடுகளும்”<br><br>திரு.கிரஹம் மத்தியாஸ், சிரேஷ்ட ஒழுங்கை நிலைநிறுத்துதல் ஆலோசகர், சே.ஃ.பர்வேர்ள்ட் |
| 10.45 - 11.00 | கோப்பி இடைவேளை |
| 11.00 - 12.15 | சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலை அமுல்படுத்தல் (I) - ஒழுங்கை நிலைநிறுத்துதலும், சிவில் சமூக மனவுணர்வுகளும் (தலைமை: கோர்டன் பீக்)<br><br>மலாவி திரு.உந்துலே மக்கசுங்குல, மனித உரிமைகள், புனர்வாழ்வு நிலையம்<br><br>சியாரோ லியோன் திரு.அட்ரின் ஹோர்ன், ஹோர்ன் லிமிற்றெற்<br><br>சேர்பியா மற்றும் மொன்ரொன்னேகுரோ கலாநிதி மார்க் டவுன்ஸ், சட்ட வினைப்படுத்தல் திணைக்களம், ஐரோப்பாவில் பந்தோபஸ்துக்கும், ஒத்துழைப்புக்குமான தாபனம் (OSCE) |
| 12.15 - 1.15 | மதிய போசனம் |
| 1.15 - 2.45 | சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலை அமுல்படுத்தல் (II) - நன்கொடையாளர் மற்றும் ஐ.நா. மனவுணர்வுகள் (தலைமை: அன்டி மக்லீன்)<br><br>செல்வி எமி பியூரியா, வெளிநாட்டு அலுவல்கள், சர்வதேச வர்த்தகத் திணைக்களம் (DFAIT)<br><br>கலாநிதி கிரன் பேடி, ஆலோசகர், சிவிலியன் காவல் துறைப் பிரிவு, ஐ.நா. சமாதானப் படைச் செயற்பாடுகள் திணைக்களம் (UNDPKO)<br><br>கலாநிதி அன்ட்ரூ மொரிஸன், வறுமை, மற்றும் பால்நிலைக் குழு, உலக வங்கி |

## அமர்வு II

2.45 - 3.30 சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் நிறுவனரீதியான கட்டிடக்கலை (I) (தலைவர்: நெக்லா சுஸிர்கி)

வெறுமையான அறைகளில் கூட்டங்கள்: காவல் துறைச் சீர்திருத்தத்தில் பொதுசன மேற்பார்வையையும், பங்கெடுப்பினையும் பலப்படுத்துதல்: வட அயர்லாந்தின் விடயம்

கலாநிதி நீல் ஜார்மன், மோதல் ஆராய்ச்சி நிறுவனம், பெல்ஃபாஸ்ட்

வாசிக்கப்படாத அறிக்கைகள், எதிர்க்கப்பட்ட விதந்துரைப்புகள்: சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் நற்குணங்களில் காவல்துறையை வழிப்படுத்துதல்

பேராசிரியர் ஒட்வின் மரினின், அரசியல் விஞ்ஞானத் திணைக்களம்/குற்றவியல்ரீதியில் திட்டம், வொஷிங்டன் அரசப் பல்கலைக்கழகம்

3.30 - 3.45 கோப்பி இடைவேளை

3.45 - 5.15 சனசமூக அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலின் நிறுவனரீதியிலான கட்டிடக்கலை (II) (தலைமை: அக்னஸ் ஹீர்விட்ஸ்)

ஆட்சி, காவல் துறைச் சீர்திருத்தம் மற்றும் சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்

கலாநிதி மார்க் பஸ்கின், சிரேஷ்ட இணையாளர், சர்வதேச அபிவிருத்திக்கான நியூயோர்க் அரச பல்கலைக்கழக நிலையம், பொதுசன கொள்கை கல்விமான், வூட்ரோ வில்சன் நிலையம்

சட்டத்தின் ஆட்சியும், சனசமூக-அடிப்படையில் ஒழுங்கை நிலைநிறுத்துதலும்

திரு. கிறில் கேல், உசாவலர், சர்வதேச அபிவிருத்தித் திணைக்களம் (DFID), ஐக்கிய ராஜ்யம்

ஐ.நா. சமாதானச் செயற்பாடுகளில் குடிமக்கள் ஒழுங்கை நிலைநிறுத்துதல்

கலாநிதி ரெனாட்டா டுவன், ஸ்ரொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI)

5.15 - 5.30 முடித்து வைத்தல் குறிப்புகள்

திரு.அன்டி மக்லீன், பிரதிப் பணிப்பாளர், சேஃபர்வேர்ள்ட்

கலாநிதி நெக்லா சுஸிகிரி, உப தலைவர், சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

# பங்கெடுப்பாளர்களின் பட்டியல்

கலாநிதி மார்க் பஸ்கின்
வூட்ரோ வில்சன் நிலையம், பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகம்

கலாநிதி கிரன் பேடி
ஐ.நா. சமாதானப் படைச் செயற்பாடுகள் திணைக்களம்
சிவிலியன் காவல் துறைப் பிரிவு

திரு.கஹ சிற்றேயா
ஐக்கிய நாடுகளுக்கான ஜோர்ஜியாவின் நிரந்தர தூதுக் குழு

கலாநிதி மார்க் டவுன்ஸ்
ஐரோப்பாவில் பந்தோபஸ்துக்கும், ஒத்துழைப்புக்குமான தாபனம்
சேர்பியாவுக்கும், மொன்ரொன்னேகுரோவுக்குமான தூதுக்குழு

கலாநிதி ரெனாட்டா டுவன்
ஸ்ரொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனம்

செல்வி எமி பியூரியா
வெளிநாட்டு அலுவல்கள், சர்வதேச வர்த்தகத் திணைக்களம்

திரு.கிறிஸ் கேல்
ஆலோசகர்

செல்வி அன்ட்ரியா குட்மன்
ஐ.நா. அபிவிருத்தித்திட்டம், நெருக்கடி தடுப்பதற்கும் மீட்பிப்பதற்குமான பணியகம்

செல்வி ஹெஸ்ரா குரெனிவோல்ட்
சே.ஃ.பர்வேர்ள்ட்

திரு.லுடுவிக் ஹுட்
ஐ.நா.அபிவிருத்தி திட்டம்

திரு.அட்ரியன் ஹோர்ன்
ஹோர்ன் லிமிற்.

அதிமேதகு திரு.ஜீன் மார்க் ஹொசெயிட்
ஐக்கிய நாடுகளுக்கான லக்ஸ்சம்பேர்க்கின் நிரந்தர தூதுக் குழு

லெப்.கேர்ணல். கென்.ஜே.டி.ஹியூம்
ஐக்கிய நாடுகளுக்கான ஐக்கிய இராஜ்யத்தின் நிரந்தர தூதுக் குழு

கலாநிதி அக்னஸ் ஹோர்விட்ஸ்
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

கலாநிதி நீல் ஜார்மன்
மோதல் ஆராய்ச்சிக்கான நிறுவனம்

திரு.ஓமன் கேன்
ஐக்கிய நாடுகளுக்கான லக்ஸம்பேர்க்கின் நிரந்தர தூதுக் குழு

திரு.டேவிட் மலோன்
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

பேராசிரியர் ஒட்வின் மரினின்
அரசியல் விஞ்ஞான திணைக்களம்
வாஷிங்டன் அரச பல்கலைக்கழகம்

திரு.கிரஹம் மத்தியாஸ்
சே.ஃ.பர்வேள்ட்

திரு.அன்டி மக்லீன்
சே.ஃ.பர்வேள்ட்

செல்வி ஜோ மொயர்
ஐக்கிய நாடுகளுக்கான ஐக்கிய இராஜ்யத்தின் நிரந்தர தூதுக் குழு

கலாநிதி அன்ட்ரூ மொறிசன்
உலக வங்கி

சமஷ்டி முகவர் றிச்சர்ட் மோசஸ்
ஐக்கிய நாடுகளுக்கான அவுஸ்திரேலியாவின் நிரந்தர தூதுக் குழு

திரு.உந்துலே மக்கசுங்குல
மனித உரிமைகள், ஆராய்ச்சி நிலையம்

செல்வி ரச்சல் நீல்ட்
ஆலோசகர்

திரு. டக் ஹல்வர் நைலாண்டர்
ஐக்கிய நாடுகளுக்கான நோர்வேயின் நிரந்தரக் தூதுக் குழு

திரு.ஹெய்க்கோ நிற்சிகே
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

கலாநிதி கோர்டன் பீக்
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

அதி மேதகு திரு.அலன் றொக்
ஐக்கிய நாடுகளுக்கான கனடாவின் நிரந்தரக் தூதுக் குழு

மார்க் ரொஜர்ஸ்
ஆலோசகர்

கேணல்.ஜூஸ்ஸி சரெஸ்சலோ
சர்வதேச சமாதானக் கல்வி நிறுவனம்

திரு.நொறிமாசா சிமோமுரா
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம்

திரு.பிளேவியஸ் ஸ்ரான்
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

செல்வி கேசி ஸ்ரட்டாட்
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

கொமாண்டர் ஹக்கன் தெலின்
ஐக்கிய நாடுகளுக்கான சுவீடனின் நிரந்தர தூதுக் குழு

கலாநிதி நெக்லா சுஸிகிரி
சர்வதேச சமாதான கல்வி நிறுவனம்

திரு. லூ வான் டி கூர்
நெதர்லாந்து சர்வதேச உறவுகள் நிறுவனம் - கிளின்ஜென்டேல்

மேஜர் நீல்ஸ் ஹென்றிக் வக்ஸ்போர்க்
ஐக்கிய நாடுகளுக்கான டென்மார்க்கின் நிரந்தர தூதுக் குழு

International Peace Academy
777 United Nations Plaza
New York, NY 10017-3521
Tel: (212) 687-4300
Fax: (212) 983-8246
www.ipacademy.org

Saferworld
28 Charles Square
London N1 6HT UK
Tel: +44 (0) 207324 4646
Fax: +44 (0) 207324 4647
www.saferworld.org.uk